# காஞ்சி

நிறுவனர்
அண்ணாதுரை



25 2-68



நம் உணவில் மூன்றில் ஒரு பாகம் சேதமாகிறது —
அழுகும் பண்டங்களைப் பாதுகாக்காவிடில் உணவுப் பிரச்சனை மேலும் தீவிரமாகும்.

# சரியான 'பாக்கிங்' முறை மூலம் இச் சேதத்தைத் தடுக்கலாம்

காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி, பால் பொருட்கள் இவையே விரைவில் சேதமடைந்து உபயோகிக்க இயலாமல் போகின்றன. அதன் காரணங்கள் பல.

அவைகளை உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்து தொலை தூரத்தில் இருக்கும் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. வழியில் பல்வேறு வெப்ப நிலைகளால் பாதிக்கப்படுவதால் விற்பனை இடத்தையடையும் தருணத்தில் அவை நல்ல நிலையில் இருப்பதில்லை. இவற்றைப் பதமாக வைக்க ஏற்ற குளிர்ச்சாதன வசதிகளோ மற்ற வசதிகளோ இல்லாமையே இதன் காரணம். இந்நிலையில் இவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும் ஒரே வழி சிறந்த 'பாக்கிங்' முறையே.

விஞ்ஞான முறையில் பதப்படுத்தி 'பாக்' செய்தால் இப்பொருள்கள் சேதமடைவதைத் தவிர்க்க முடியும். மேலும், பெரும் அளவில் நாட்டில் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லவும் 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் வசதியானவை

நாட்டின் உணவு சேதமாவதைத் தடுக்க மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் விஞ்ஞான முறையில் பதப்படுத்தும் முறைகளை அளிக்கிறார்கள். உணவுப் பொருட்களைச் சோதிப்பது, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளை சிபாரிசு செய்வது - உதாரணமாக, வெவ்வேறு மாதிரியான தகரடின்களிலும், மற்றும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து வந்த தொழில் நுட்பத்துடன் கூடிய சிறந்த 'பாக்கிங்' முறைகளையும் அளிப்பது இவையெல்லாம் இவ் வசதிகளில் அடங்கியவை.

இந்தியாவில் உள்ள 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் கம்பெனியார், உணவுச் சேதத்தை தடுக்க உதவுகின்றனர். இப்போதைய உணவுப் பற்றுக்குறை நிலையில் எங்கள் பணி மிகவும் சிறியது என்பதை நாங்கள் அறிவோம். ஆயினும் இச் சமயத்தில், சிறு துளியும் பெரு வெள்ளமாக உதவும் என்ற நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

MB

**மெட்டல் பாக்ஸ்**

பாதுகாப்பான பாக்கிங்

MB/4103

# காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 4 25—2—68 இதழ் 31


# சுமை குறையுமா?

மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட் வரப்போகிறது என்றுலே, பொதுமக்கள் பீதியுடன் அதனைக் கவனிக்க வேண்டிய நிலைமைக்கு, கடந்த சில ஆண்டுகளாகத் தள்ளப்பட்டிருக்கிருர்கள். இரயில்வே பட்ஜெட் என்றும், பொது பட்ஜெட் என்றும் மகுடமிட்டுக்கொண்டு, ஒவ்வொன்றும் மக்களை எந்த அளவுக்கு மனங்குன்றி, குறுகிப்போகச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கும் மேலாகவே, தம் வல்லமையைக் காட்டுவதென்பது மத்திய அரசாங்கத்துக்குப் பழகிவிட்ட ஒன்ருகவே ஆகிவிட்டிருக்கிறது.

இந்தக் கிழமை மத்தியில், மத்திய இரயில்வே அமைச்சர் திரு. புனுச்சா சமர்ப்பித்த இரயில்துறை நிதி நிலை அறிக்கையில், பயணச் சீட்டுக்களுக்கும், பிளாட்பாரம் டிக்கெட்டுகளுக்கும், சாமான்கள் போக்குவரத்துக்கும்கூட கட்டணம் உயர்த்தி அறிவித்திருக்கிருர்.

ஐந்து முதல் 25 சதவீதங்களுக்குப் பயணிகள் டிக்கெட்டு கட்டண உயர்வும், துரித பார்சல்களுக்கு 10 சதவீதமும், சாதாரண கூட்ஸ் போக்குவரத்துக்கு 3 சதவீதமும் கட்டணங்கள் உயர்த்தப்பெற்றுள்ளன.

கடந்த ஆண்டுதான் இந்த இனங்களின் மீது பனிரெண்டரை சதவீதம் கட்டணம் உயர்த்தப் பெற்றது.

கட்டண உயர்வுகளின் இனத்துக்கு, எந்தத் தலைப் பிட்டுக்கொண்டாலும், உயர்வுத் தொகை அத்தனையையும் வாழ்க்கைத்தரத்தில் கீழே கீழே போய்க்கொண்டே இருக்கும் மனிதன்தான், பாவம் அவன் இந்தியத் துணைக்கண்டத்தில் பிறந்துவிட்ட ஒரே ஒரு குற்றத்துக்காக ஏற்றுத்தீரவேண்டிய நிர்பந்தநிலையில் இருக்கிருன்.

அரசாங்கங்களின் பொருளாதாரக் கொள்கைகள் உண்டாக்கிவிடுகின்ற சுமைகள், காரணமாக அழுத்தப்பெறும் மனிதன் அழுத்தப்படுவதற்கும் ஒரு அளவு இருக்கவேண்டாமா?

வரிஉயர்வு என்றுலும் கட்டணங்கள் உயர்வு என்றுலும் பொது மனிதனுக்குப் பொருள் ஒன்றுதான்.

இப்போதைய இரயில்வே பட்ஜெட்டின்காரணமாக எத்தனை எத்தனை வகைகளில் மனிதன் "கொள்ளை" அடிக்கப்பட ஏதுவாக்கப்படுகிருன்?

கட்டண உயர்வுகள் மூலம் அவனே நேரில் அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியவனுகிருன். சரக்குகள் கட்டண உயர்வு மூலமாக அவன் வாங்கித் தின்று, உயிரைக் காத்துக், கொள்ளவேண்டிய கடமைக்காக, இன்னும் அதிக விலை கொடுக்கவேண்டியவனுகிருன்.

சுமார் 27 கோடி ரூபாய் துண்டுவிழும் நிலையைச் சரிக்கட்டுவதற்கென்று, இந்த நிலையை உண்டாக்கி விட்டிக்கும் மத்திய அரசு, தான் தயாரிக்கின்ற பிரமாண்டமான நிதிநிலை கொண்ட அறிக்கையில் இந்த தொகை, சுண்டைக்காய் அளவுகூட இருக்காது.

அதுமட்டுமல்லாமல், இந்தியத் துணைக்கண்டத்தில், விலைவாசிகளின் ஏற்றம் ஒரு உச்சவரம்பையும் தாண்டி, எங்கோ விண்ணுலகை எட்டிப் பயணம் தொடங்கியுள்ள நிலையில், பல மாநில அரசாங்கங்கள்—பொது மக்களது வாழ்க்கை நலனில் இதயத் தூய்மையோடு அக்கறை செலுத்துகின்ற சில அரசுகள்—விலைவாசியைக் குறைப்பதற்கான நடவடிக்கையில், பொருளாதார இழப்புக்களையும் கூட பொருட்படுத்தாமல், ஈடுபட்டு, செயற்பாட்டிலிறங்கியுள்ளன.

இம்முயற்சிகள் பெரும்பாலும், காங்கிரசு அல்லாத மாநிலங்களிலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்நிலையில் இதுபோன்ற முயற்சிகள் அனைத்தையும் திட்டமிட்டுக் கெடுப்பதுபோல மத்திய அரசு, புதிது புதிதாக நோட்டுகளை அச்சடித்து வெளியிட்டுக் கொண்டிருப்பதுடன்,பட்ஜெட்டுகள் மூலமும் குலைக்கநினைப்பது அத்தகு அரசாங்கங்களையே குலைக்க எடுக்கும் நடவடிக்கைகள் என்றுதான் எண்ணிக்கொள்ளவேண்டியிருக்கிறது என்பதுடன், பொதுமக்கள் மீது உண்மை அக்கறை உடையதுதான் மத்திய அரசு என்று நம்பிக்கை கொள்வதற்கு சான்றில்லை என்பதும்தான் தெளிவாகிறது.

மக்கள் பிரதிநிதிகளால் செயல் படுவதுதான் ஒரு அரசு என்றுலும், அந்த அரசின் பிரதிநிதிகள் சிலரது செயல் அந்த பிரதிநிதிகள் அத்தனைப் பேருடைய முழுக் கருத்தும், ஆதரவும் கொண்டதாக இருக்க முடிவதில்லை.

எனவே, கொள்கைகளை வகுக்கின்ற சிலர், மக்கள் பிரதிநிதிகள்என்றபோர்வையில்,சில பலவற்றை-மக்கள் கருத்துக்கு மாறுனவற்றைவகுக்கவும் முன்வந்துவிடுகின்றனர். அந்த நிலையில் வெளிவந்திருப்பதுதான் இந்த பட்ஜெட் என்று மனதார நம்புகிரேும்.

வாழ்க்கையை ஒரு பாரமாய்க் கருதி வாழ்கின்ற நிலையில் உழலும், இந்தியக் குடிமகனது வாழ்க்கையில் மேலும் ஒரு சரிவு—சம்மட்டி அடி இது என்றுதான் கருதுகிரேும்.

அடுத்து வரவிருக்கும் பொது பட்ஜெட்டிலாவது இதற்குப் பரிகாரம் கிடைக்குமானுல் இந்தியக் குடிமகன் ஒருவன்' தான் ஒரு இந்தியன்' என்று சொல்லிக் கொள்ள பெருமைப்படுபவனுக இருக்க முடியும்! செய்வார்களா? சுமையைக் குறைப்பார்களா?

# செய்த பிழைக்குத் தண்டனை?

மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை, மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று எதிர்க் கட்சிகளின் பலமான குற்றச்சாட்டுக்கு, சரியான ஆதாரம் காட்டக்கூடிய—அதிர்ச்சி தரக்கூடிய சம்பவம் ஒன்று நடைபெற்று முடிந்திருக்கிறது.

இந்தியாவுக்கும், பாகிஸ்தான் அரசுக்கு மிடையே கட்சு தொடர்பான விவகாரத்தில், சுமார் 317 சதுர மைல் பரப்பை, பாகிஸ்தானுக்குக் கொடுத்துவிட வேண் டும் என்று மூவர் குழுவாக இருந்து செயல்பட்ட அனைத்துலக டிரிபியூனல் அண்மையில் தீர்ப்பு வழங்கி இருக்கிறது.

இந்தப் பரப்பில் இந்திய ஆதிக்கப் பகுதியான பியோல், வாலோ, கடுன் உட்பட, ரகீம்ஜி பசாருக்குத் தெற்கேயுள்ள சிறு பகுதிகளும், தாராபன்னி மற்றும் சாட்பேடும் அடங்கி இருக்கும் என்பதை, அந்த தீர்ப்பு சுட்டிக்காட்டி இருக்கிறது.

ஆக்கிரமிப்பு, வன்முறை ஊடுருவல் என்று குறிப் பிடத்தக்க ஒரு விவகாரத்தை, 1965-ல் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஸ்வரண் சிங் அவர்கள், தகராறு பகுதி என்றும், எல்லைத் தகராறு என்றும் விமர்ச்சிக்கத் தொடங்கியதின்பின்னுல்தான், அதுவரையில்சுமார்20 சதுர மைல் பரப்புக்குள், கால் நடைகளை மேயவிட்டுக் கொண்டிருந்த பாகிஸ்தான், அந்தப் பகுதியை ஒரு உண்மையான எல்லைத் தகராறு பகுதியே என்று அடித் துப் பேசவும், ஊடுருவல் போன்ற துராக்கிருத வழி களில் தீவிரமாக இறங்கவும் செய்திருக்கிறது.

இது தொடர்பான தகராறில், இரு நாடுகளுக்கு மிடையே போர் ஏற்படவே ஒரு சர்வதேச குழுவின் சமரசத்துக்கு பிரச்னையை விட்டுவிட வேண்டும் என்று பிரிட்டன் கூறிய யோசனையை இந்தியா ஏற்றுக் கொண்டதுடன், அவ்வாறு நியமிக்கப்பெறும் சர்வதேச ட்ரிபியூனலுக்குத் தன் சார்பில், யுகோசுலாவிய நீதிபதி திரு. பெப்லர் என்பாரையும் நியமித்தது. பாகிஸ்தானும் அதுபோலவே, ஈரானிய நீதிபதியான நசுருல்லா எண்ட ஜாம் என்பாரை ஒப்புக்கொண்டது. மிகுந்த சங்கடத் துக்கு அப்புறம் இரு நாடுகளுக்கும் பொதுவாக மூன்று வதாக ஒருவரை ஐ. நா. மன்றம் ஸ்வீடன் நீதிபதியான குன்னர் லாகர்க்ரென் என்பாரை நியமித்தது.

1965ல் நியமனமான இந்த மூவர் கொண்ட குழு தான், இப்போது பாகிஸ்தானுக்கு இந்தியப் பகுதியில் 317 சதுர கற்களைக் கொடுத்துவிட வேண்டும் என்ப தாக நடுநிலை சமரசம் செய்திருக்கிறது என்ற பெயரில் அநியாயமான தீர்ப்பு வழங்கி இருக்கிறது.

இருதரப்பு நாடுகளும் ஒப்புக்கொண்டு உடன்பாடு தெரிவித்துக்கொண்ட ஒரு குழுவின் தீர்ப்பு இது! என்பதனுல் இதனை ஏற்றுக்கொண்டு செயல்பட இரு நாடுகளுமே கடமைப்பட்டிருக்கின்றன.

பாகிஸ்தானைப் பொறுத்தமட்டில், இதில் ஆட்சேப னைக் குரியது எதுவுமில்லை. இந்தியப் பரப்பின் சில பகுதிகளை, தன் ஆதிக்கத்தில் ஏற்றுக்கொள்ள கசக்கப் போவதில்லை, தகராறு கிளப்பியதின் உள்நோக்கமும் இதுதான்! ஆனுல் இந்தியாவுக்கு?

இந்தியா—பாகிஸ்தான் தொடர்பான எந்த விவ காரத்தையும் வெளிநாடுகள் ஒரு சார்புக் கண்ணேட் டத்துடனேயே கவனிக்கின்றன என்பதும், அவை பாகிஸ்தான் பக்கமே சாய்ந்து வந்திருக்கின்றன என்ப தும், இந்தியாவின் எந்தவொரு கோரிக்கையும் அல்லது தர்க்க ரீதியான—ஆதாரபூர்வமான எடுத்துக் காட்டுக் களும் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டு வந்திருக்கின் றன என்பதும் இன்னமும் இந்தியாவினுல் புரிந்துகொள் ளப்படாமலிருப்பதுதான் விந்தையானதாக இருக்கிறது!

வெளிஉலகின் போக்கைப் புரிந்துகொள்ளப்பட முடியாத தன்மையிலேயே கட்சு—ரண் பகுதி பற்றிய தீர்ப்பையும் விமர்சிக்கத் தொடங்கி இருக்கிறது காங்கி ரஸ். விவாதப் போக்கு எப்படி எப்படி சூடும், சுவையும் நிரம்பியதாக இருப்பினும், இறுதி முடிவு தீர்ப்பினை ஏற்றுக்கொள்வது என்பதாகத்தான் இருக்கவேண்டும்!

அல்லாமல் நீதிபதிகள் சுட்டிக்காட்டி இருக்கிற "அரசியல் பகுதியை" இந்தியா குறிப்பிட்டுக்காட்டி, இன்னமும் "அரசியல்" நடத்த விரும்பினுல், எதிர் காலத்தில் இந்தியத் துணைக் கண்டம் "தனிமை உணர்ச்சி"க்கு ஆளாகத்தான் நேரிடும்.

ஒரு விவகாரத்தைத் தீர்வுக்குக் கொண்டு வர விரும்பும் எந்த ஒருநாடும், லாபம்—அல்லது நட்டம் அடைந்துதான் தீரவேண்டும்!

இந்தியாவுக்கு இழப்பு! என்றவகையில் ஏற்பட்டி ருக்கிற தீர்ப்பை, தாங்கள் முற்பகல் செய்துவிட்ட வினை யின் அறுவடை என்ற அடிப்படையில் ஏற்றுத்தீர்வது தான் ஒரே வழி என்றே நம்புகிறேம்!

"அங்குலம் கூடவிட்டுக் கொடுக்க முடியாது" என்ற உணர்ச்சிக் குரல்களுக்கு இனி மதிப்புமில்லை— வழியுமில்லை.

# அமைதி வழி தேடட்டும்!

ஒருமுகமாக இந்தித் திணிப்பைக் கண்டித்து, போர்க்குரல் எழுப்பவேண்டிய மேற்கு வங்கம், தன் ஒருமுகமான எதிர்ப்பைக் காட்டி, கோஷ் அமைச்ச ரவையைக் கலைத்து, குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு வழிகோலிக் கொண்டுவிட்டது.

கூட்டணி ஆட்சியிலிருந்து, விலகி, அஜய்முகர் ஜியின் ஆட்சியைக் கவிழ்த்த புகழுடையாரை, காங் கிரசைச் சேர்ந்த இன்னெருவரே கவிழ்த்துவிட்டு, அந்த புகழில் பங்கு பெற்றுக் கொண்டுவிட்டார். தமக்கு ஒரு அமைச்சர் பதவி கொடுக்கப்படவில்லை என்ப தற்கே இது போன்ற அரசியல் விளையாட்டுகள் நடை பெற்று முடிந்திருக்கிறது என்பது தெளிவாகப் புரிகிறது.

கோஷின் அமைச்சரவை ஏற்பட்டது முதல், அது ஏற்பட்டவிதம்—இயங்கும் தன்மை பற்றிய சட்ட ரீதி யான பரிசிலனைகளை இந்தியா சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டது.

கவர்னரை திரும்பப் பெற்றுக்கொள்வது, திடீரென்று ஒரு அமைச்சரவையைக் கலைத்துவிட்டதாக அறிவிப் பது, இன்றிலிருந்து இந்த மாநிலத்தில் ராஷ்டிரபதி ஆட்சி அமுலாகிறது என்று பிரகடனப்படுத்துவது போன்ற அதிகாரங்களின் துணை கொண்டு, 1967க் குப்பிறகு மத்திய அரசு, ஜனநாயகத்தைப் பரிசோதனைச் சாலையில் கொண்டு வந்து வைத்திருக்க முடிந்திருக் கிறபோது, மே. வங்க சபாநாயகரின் பதவியைப் பறித் துக் கொள்ளவும், "இது சட்ட ரீதியான அரசு அல்ல" என்ற அவரது தீர்ப்புக்கு எதிராகச் செயல் படவும் முடியாமல் போனது விந்தைதான் என்றுலும், நீதி, இந்தியத் துணைக்கண்டத்தில், முழுமையாகச் செத்துப்

(13-ம் பக்கம் பார்க்க)

# அவரே பார்த்தாராம்!

அன்புள்ள நண்பா!

> 'போலீசார் தடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்; பொள்ளாச்சியில் நானே நேரில் பார்த்தேன்! முன்னுல் சென்று கருப்புக் கொடி காட்டுங்கள் என்றுகூடத் தூண்டிவிட்டார்கள்; லாரிகளில் ஆட்களைக் கொண்டு வந்தார்கள்! பொதுமக்கள் மீது தடியடிப்பிரயோகம் செய்தார்கள்!''

குற்றச்சாட்டு பயங்கரமாக இருக்கிறதல்லவா! சட்டத்துக்குப் புறம்பான ஒரு குற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது; அதனைத் தடுக்காமல், போலீசார் பார்த்துக்கொண்டிருந்தார்கள்! என்ன நினைக்கிருய் நண்பா!

ஒரு நாட்டின் ஜனநாயக சித்தாந்தம் வேருடன் கெல்லி எறியப்பட்டு, இராணுவபலம் ஒன்றினுல் மட்டுமே — ஆட்சி இயந்திரத்தை இயக்கிச் செல்ல முடியும் என்ற நெருக்கடியான நிலைமை உண்டாகி, சர்வ அதிகாரமும் படைத்த தனி மனிதன் ஒருவனே, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு கோலேந்தி வந்து கொலுபீடத்தில் அமர்ந்துகொண்டு ஆட்சி செய்யும் நிலைமை ஏற்பட்டுவிட்டிருந்தால்கூட, நிகழ்கின்ற சட்டப் புறம்பான ஒரு குற்றத்தைப் பார்த்துக்கொண்டு போலீசார் வாளாவிருந்தால், உண்மையில் அது மாபெரும் குற்றமேயாகும். கூண்டேற்றிக்கொண்டு வந்து நிறுத்தி, அத்தகைய கொடுமைக்காரர்களுக்குச் சரியான தண்டனை கொடுக்கவேண்டும் என்று நினைக்கிருயா? நல்லது.

போலீசார், குற்றம் நிகழ்வதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருந்ததை, சரியான ஒரு சாட்சி, பழுதுபட்டுப் போகாத இரு கண்களினுலும் பார்த்துக்கொண்டே இருந்திருக்கிருர்!

ஆமாம் நண்பா, குற்றம் நிகழ்வதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிருர் — தடுக்க முயலாமல் பார்த்துக்கொண்டிருக்கிருர்.

தடுக்க முயலாமல் அப்படிப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமானுல், ஒன்று நிகழ்கின்ற அந்தக் குற்றத்துக்கு அவர் உடந்தையாக இருக்கவேண்டும்; அல்லது எதுவும் செய்ய முடியாத கதியற்ற நிலையில் இருக்கவேண்டும்.

> போலீசார் தடுக்கமுயலவில்லை; நானே பார்த்துக்கொண்டிருந்தேன்

என்பதிலிருந்து, நிகழ்ந்த குற்றத்திற்கு உடந்தையாக்க முயலவேண்டாம்; நிர்க்கதியான நிலையிலேயே, கண்ணுல் பார்த்தவர் இருந்திருக்கிருர் என்று மட்டுமே வைத்துக்கொள்வோம்!

> கருப்புக்கொடி காட்டுங்கள் என்று தூண்டிவிட்டார்கள்!

என்கிருரே, யார் தூண்டிவிட்டது. போலீசார் தடுக்காமல் இருந்தார்கள் என்று கூறி, கருப்புக்கொடி காட்டும்படியாகத் தூண்டிவிட்டார்கள் என்ருல், யார் தூண்டிவிட்டது?

போலீஸ்காரர்கள்தான், கருப்புக்கொடி காட்டும்படியாகத் தூண்டிவிட்டார்களா? அல்லது பொதுமக்கள் தூண்டிவிட்டார்களா? வேறு எதிர்க்கட்சியினர் —யாரேனும் தூண்டிவிட்டார்களா?

வாக்கிய அமைப்பிலிருந்து பார்த்தால், போலீஸ்காரர்கள்தான் தூண்டிவிட்டார்கள் என்று ஆகிறது. அவர்கள்தான் தூண்டிவிட்டார்கள் என்று தெளிவாக —வெளிப்படையாகக் கூருமல்விட்டதனுல் போலீசார் மீது இந்தக் குற்றத்தை, அந்தச் சாட்சி கூற விரும்பவில்லை என்றே வைத்துக்கொள்வோம்!

> லாரிகளில் ஆட்களைக் கொண்டு வந்தார்கள்!

என்றும் சொல்லி வைத்திருக்கிருர், யார் கொண்டு வந்தது என்பதற்கும் விளக்கம் இல்லை. அடுத்ததாக,

> ''மக்களை அடிக்காதீர்கள்; என்னை அடியுங்கள் என்று சுப்பிரமணியம் சொன்ன பிறகுதான் தடியடி நின்றது''

என்று முடித்து வைத்திருக்கிருர். வக்கீல்களின் வாதத் திறமையோடு இந்த குற்றச்சாட்டை ஆராய்வதானுல், அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் போலீசார் மீதுதான் என்று திட்டவட்டமாகக் கூறிவிட முடியும். சுப்பிரமணியனுர் கூறிய பின்புதான் தடியடி நின்றது என்று முத்தாய்ப்பு வைத்திருப்பது போலீஸ்காரர்களை என்று பெறப்படுவதாலும், குற்றச்சாட்டின் தொடக்கம் போலீசைப் பற்றியதாலும், அந்த சாட்சி போலீஸ் மேல்தான் அனைத்துக் குற்றங்களையும் சுமத்த முன்வந்திருக்கிருர் என்று—நீதிமன்றத்திற்குச் சென்ருல் மட்டும்-வழக்காட முடியும்!

மேலே கூறப்பட்ட குற்றச்சாட்டு, அதனை 'நானே நேரில் பார்த்தேன்'' என்ற சாட்சியத்தோடு கூறி இருக்கிற இடம் தமிழகச் சட்டமன்றம். குற்றச்சாட்டைக் கூறி இருப்பவர் — தமிழக எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் திரு. கருத்திருமன் அவர்கள்!

சட்டமன்றக் காங்கிரசுக் கட்சியை வழிநடத்திச் செல்லுவதற்காக, ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற அவர், தமிழகக் காங்கிரசுக் கட்சியை வழி நடத்திச் செல்லுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற — திரு. சுப்பிரமணியம் அவர்களுக்காக இதனைச் சொல்லி இருக்கிறார். பிரச்னை, சட்டம், ஒழுங்கு சம்பந்தப்பட்டது. தமிழகத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட 30 நாட்களுக்குள்ளாக, "கழக ஆட்சியில் சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது" என்று தீர்மானம் போட்டு வைத்துக்கொண்டு செயல்பட்டு வருகிறார்களே, அதனை மெய்ப்பித்துக் காட்டுவதற்காக ஏற்றுக்கொண்ட ஒரு நிகழ்ச்சியை விளக்குவதுதான் அந்தக் குற்றச்சாட்டு.

நண்பா! தமிழகத்தில், காங்கிரசுக் கட்சியின் பரிதாபகரமான நிலையை, சரியான மருத்துவம் செய்து நடமாடவாவது விடவேண்டும் என்பதற்கு அந்தக் கட்சியின் குறிப்பிட்ட சில உறுப்பினர்கள், திரு. சுப்பிரமணியம் அவர்களை, 'டாக்டராக'த் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்! என்ற செய்தி நீ அறிந்ததுதானே!

அந்த டாக்டர், நோய்நாடி, நோய் முதல் நாடுவதற்காக—சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். ஈன்று புறந்தந்த இன்பப் பகுதியாம் கொங்கு நாட்டைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்! முதலாவதாக!!

இந்தி தொடர்பான விவகாரத்தில், தமிழ்நாடு காங்கிரசுக் கட்சிதான் இருதலைக்கொள்ளியாக இருக்கிறதே-வாய்மூடிக் கொண்டிருந்திருக்கலாம்! இந்தி எதிர்ப்பை நடாத்திக் காட்டிய மாணவமணிகளின் மேல் தம் நாவின் அரிப்பை சாமர்த்தியமாகத் தேய்த்துவிட்டு—இதம் பெற நினைத்தார்! பாவம்! "படிக்காமல் பட்டம் பெற நினைக்கிறார்கள் மாணவர்கள்" என்று கூறி பதம் பார்த்தார்! அவர் பார்த்த பதம்தான், தமிழகத்தின் சில மாவட்டங்களையே கொந்தளிக்கும் நிலையில் கொண்டு வந்து சேர்த்துவிட்டதோடு, சட்டமன்றத்தில் மதிப்புக்குரிய கருத்திருமன், சாட்சி கூறி, குற்றச்சாட்டையும் எழுப்பும் நிலையைத் தோற்றுவித்திருக்கிறது!

நண்பா! நாவின் தடிப்புக்கு எத்தனை எத்தனையோ பக்குவமான மருந்துகள் இருக்கும்போது, மருத்துவம்—பார்க்கச் சென்ற மருத்துவரே தவறான மருந்தை உட்கொள்ளலாமா!

முடிந்துபோன பழைய நிகழ்ச்சிகள் இவை. சட்டமன்றத்தில் இதனை எடுத்துக் காட்டி, அராஜகம் நாடெங்கும் தலை விரித்தாடுகிறது; சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்கிறார். கழக அரசு இந்த வன்முறைகளைத் தடுக்க முயற்சிகள் எடுக்கவில்லை என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்.

சுப்பிரமணியனார் அவர்கள், ஒரு எதிர்க்கட்சியின் தலைவர்—அவர் பிரசாரத்துக்காக சுற்றுப்பயணம் மேற்கொண்டார் — வன்முறைகள் தலையெடுத்தன—போதிய பாதுகாப்பானை அரசு தரவில்லை என்பதுதான் குற்றச்சாட்டின் மொத்தக் கருவாகும்.

நண்பா! 1967-ம் ஆண்டு மார்ச்திங்கள் 6-ம் நாளுக்குமுன்—

பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழகத்தில் மிகுந்த வலிமைபடைத்த ஒரு கட்சியின் தலைவர்; அன்றைய காங்கிரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர்.

கருத்திருமன் அவர்களைப் போன்ற எதிர்க் கட்சித் தலைவர் அல்ல— இப்போதைய சுப்பிரமணியத்தையொத்த எதிர்க்கட்சித் தலைவர்.

ஒவ்வொரு கட்சியும் தன் பிரச்சார பீரங்கியை மிக வேக வேகமாக முடுக்கிவிட்டிருந்த நேரம்.

1967ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள், எதிர்க்கட்சித் தலைவராம் பேரறிஞர் அண்ணா அவர்களோடு நானும் தேர்தல் சுற்றுப்பயணத்தில் கலந்துகொள்ளும் பெறும் பேறு பெற்றிருந்தேன்.

தேர்தல் மூன்று கட்டங்களாக நடந்து முடிந்ததல்லவா! முதல் கட்டமாக அண்ணா அவர்கள் தேர்தல் முடிந்தவுடனே, கழகத் தலைவர்கள் பெரும்பாலோரது தேர்தலும் அந்த முதல் கட்டத்திலே நடைபெற்று முடிந்துவிட்டதனால், இரண்டாவது, மூன்றாவது கட்டப் பகுதிகளுக்குப் பிரசாரத்திற்கு எல்லா தலைவர்களுமே புறப்பட்டுவிட்டார்கள்.

அதுபோல் அண்ணா அவர்களும் புறப்பட்டார்கள். இன்னின்ன பகுதிக்கு—நாங்கள் வருகை தருகிறோம் என்ற தகவலை முன் கூட்டியே அறிவித்துவிட்டு, அந்த அறிவிப்பின்படி பயணத்தை மேற்கொண்டார்கள் அறிஞர் அண்ணா அவர்கள். பாவ,புண்ணியத்தில் நம்பிக்கை இருக்குமானால், அறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு திரும்பி காஞ்சிபுரம் வந்து சேர்ந்தது—நீயும், நானும், தமிழக மக்களும் செய்த தவப் பயன்தான் என்பதையும் ஒப்புக்கொண்டு ஆக வேண்டும்!

இரண்டு மூன்று நாட்கள்தான் பிரசாரம் செய்வதற்குரிய காலம். அந்த குறைந்த அவகாசத்திலே கூட இரண்டு மூன்று மாவட்டங்களில் பிரசாரம்!

காலை ஒன்பது மணிக்குத் தொடங்கினால், பொழுது புலரும் நேரம் வரையில் கூட்டங்கள்; உறங்குவதற்குக் கூட அல்ல—உண்பதற்குக் கூட அவகாசமில்லாத அளவுக்கு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள்.

அறிஞர் பெருந்தகையாம் அண்ணா அவர்களை, கழகத் தோழர்கள் மிகச் சரியாகவே புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதனை, அந்தப் பயணத்தில்தான் என்னால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிந்தது. அதற்கு முன்னதாக சனவரித் திங்களில், சில தடவைகள் அண்ணா அவர்களது பயணத்தில், நானும் ஒட்டிக் கொண்டேன். ஆயினும் — பிப்ரவரி தேர்தல் இரண்டாம் — மூன்றாம் கட்டப் பயணத்தைப் போன்ற பயங்கரங்கள்—கொடுமைகள்—இவைகளை எல்லாம் மறந்துவிடும்படியான அளவுக்கு மக்களின் வரவேற்புக்கள், அந்த மக்கள் மன்றத்தின்முன் அறிஞர் பெருந்தகையை

## எழுத்தாளர்களுக்கு

தமிழகப் பண்பாட்டை, வாழ்க்கை விளக்கமாய்க் கொண்ட சிறந்த சிறுகதைகள் வரவேற்கப்படுகின்றன. 'காஞ்சி' இதழின் மூன்று பக்கங்களுக்கு மிகாமலும், காகிதத்தின் ஒரே பக்கத்திலும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

பிரசுரிக்கப்படும் கதைகளுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

போதிய தபால் தலைகள் இருந்தால் மட்டுமே, பிரசுரிக்கப்படாதவை திருப்பி அனுப்பப்படும்.

—ஆசிரியர்.

மேடையேற்றிவைக்க கழகத்தினர் ஏற்பாடு செய்திருந்த கூட்டங்களின் அளவுகள் இருந்தன.

காடு, மேடு, கழனி, நகரம் எல்லாம், கூட்டங்கள்! காலை முதல் கருக்கல் வரை!

உதயசூரியன் உதிக்க ஓரிரு சாமங்களே இருக்கின்றன. நாமக்கல் என்ற ஊருக்குள் நுழைந்து, கூட்டம் நடைபெற விருந்த இடத்துக்குச் செல்லும்போது! பல்லாயிரக் கணக்கான மக்கள் குன்றின் பல பகுதிகளிலும் காத்துக் கிடக்கிறார்கள்.

அறிஞர் பெருந்தகையின் பயணத்தின் மூன்றும் நாள். மிகக் களைத்துவிட்டிருந்தார்கள். ஊனும் உறக்கமுமில்லாத காரணத்தால்!

மேடையேறி நின்று இயலாமையைக் கூறிவிட்டுஉடனேயேஇறங்கிவிட்டார்கள்! நிகழ்ச்சிகள் அந்த அளவுக்கு மிக்கிருந்த காரணத்தால்.

## வாசகர்களுக்கு அறிவிப்பு

பேரறிஞர் அண்ணா அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருப்பதால்,

**"இன்ப ஒளி"**

இக்கிழமை வெளியிடப் பெறவில்லை என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்



சட்டமன்ற எதிர்கட்சித்தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் குற்றம் சாட்டி இருக்கிறாரே! அவை அத்தனையும்—நிகழ்ந்தது அந்தப் பயணம் முழுவதும்.

1967 பிப்ரவரி 16-ம் நாள் மாலை, நாமக்கல்லுக்குப் பிறகு பகல் முழுவதும் சேலம் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்றுவிட்டு மாலை நாலேகால் மணிக்கு சேலத்தை அடுத்த ஆத்தூர் கூட்டத்துக்கு வந்து சேருகிறார்கள். அன்று மாலை 5 மணிக்குள் இரண்டாம் கட்டத் தேர்தல் பிரசாரங்கள் முற்றுப் பெற்றுவிட வேண்டும்! பொதுவிடங்களில் எந்த தேர்தல் நிகழ்ச்சிகளும் நடைபெறக் கூடாது.

எந்தத் தேர்தல் நிகழ்ச்சிகளும் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். பொது நிகழ்ச்சிகளுக்கு அந்தக் கட்டுப்பாடில்லை. அப்படி இருப்பதாக அப்போதைய அரசினரால் அறிவிக்கப்பெறவுமில்லை.

அண்ணா அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பேச்சு முடியவில்லை. காங்கிரஸ் அரசு, மக்களுக்கு இழைத்த கொடுமைகளையும், அதன் ஆட்சியில் நாடு, பாழாக்கப்பட்ட சோக வரலாற்றையும் புள்ளிவிவரங்கள் காட்டியும், ஆதாரங்கள் தந்தும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

சங்கு அலறுகிறது, 5 மணி ஆகிவிட்டது-நிகழ்ச்சிகளை முடித்துக்கொள்ளுங்கள் என்று அறிவிப்பதற்காக.

சங்கொலி கேட்டதும், அண்ணா அவர்கள் 'எனவே தோழர்களே' என்று தொடங்கி, முடித்துக் கொள்கிறார்கள்.

அன்று பகல், அந்த ஆத்தூர் அல்லோல கல்லோலப்பட்டிருக்கிறது. அமளி துமளியாகி இருக்கிறது. காங்கிரசுக் குண்டர்கள், கழகத் தோழர்களை பல இடங்களில் மடக்கித் தாக்கி இருக்கிறார்கள்! மாலை கூட்டம் நடைபெறறு விடுமா? பார்த்துக் கொள்கிறோம்! என்று அறைகூவல் விட்டிருக்கிறார்கள்!

இவையெல்லாம் யாருக்குத் தெரியும்? கூட்டம் முடிந்து அண்ணா அவர்கள் தம் காரில் ஏறும்போது, ஒரு பள்ளியில் ஆண்டு விழா நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்திருப்பதாக அறிவிக்கிறார்கள்!

பள்ளி நிகழ்ச்சிதான்! பள்ளிக்கூட கட்டிடத்துக்குள்ளேதான்! 'ஒலி பெருக்கி'கூட இல்லாத நிகழ்ச்சிதான்!

வாக்கு வாதங்களுக்குப் பிறகு அண்ணா ஒப்புக் கொள்கிறார்கள். கார், பள்ளிக்கூடத்துக்குச் செல்கிறது.

செல்லும் வழியில்...!

நினைத்தாலும் குருதி கொதிப்பு அல்ல, உறைந்தே போகும் போன்ற நடவடிக்கைகள்!

லாரிகளில் ஆட்களைக் கொண்டு வந்தார்கள்! என்று குற்றம் சாட்டினாரே கருத்திருமனர்! அந்த லாரியில்—மூன்றுக்கும் மேலே—அன்று பகல் அங்கே ஊர்வலம் நடாத்திய காங்கிரசுக் குண்டர்கள் அறிஞர் அண்ணாவின் காரைத் துரத்துகிறார்கள்!

எந்த அறிஞர் பெருந்தகையின் சுட்டு விரல் அசைவுக்கு—ஆணைக்குக் காத்துக் கிடக்கிறதோ அந்த அண்ணா அவர்களுக்கு—அதே தமிழகத்தில்தான் அப்படியான நிலை!

போலீஸ்காரர்கள் இல்லாமல் இல்லை. தனிப் படையினரும், வேறு மாவட்டத்திலிருந்து வந்திருந்தோரும், உள்ளூர்க்காரர்களும்கூட.

பதட்டநிலை இருக்கிறது என்று எந்த போலீஸ் அதிகாரியும் அறிவிக்கவில்லை! கூட்டம் நடத்தவேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ளவில்லை. அண்ணா அவர்களும், 'நாங்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள்' என்பதை எடுத்துச் சொல்லவில்லை. சொல்லத் தேவையுமில்லாதிருந்தது!

என்றாலும், நண்பா! பள்ளி நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். 5 நிமிடங்கள் மட்டுமே பேசினார்கள்; நிருவாகம் பற்றியும், மாணவர் கடமை பற்றியும், இது உள்ளே. வெளியே?

போலீஸ்காரர்களின் முன்பாகவே லாரியில் வந்த குண்டர்கள் குடித்துக் கலாட்டா செய்துகொண்டிருந்தார்கள்!

வேறு காரணமாக, வெளியேயே தங்கி இருந்த நானே இதனைக் கண்ணால் கண்டேன். ஆயிரக் கணக்கான

பொதுமக்களும் பார்த்துக்கொண்டுதான் இருந்தார்கள்!

குடித்துவிட்டுக் கலாட்டா செய்தார்கள் குண்டர்கள். மூன்று லாரிகள் நிறைய குண்டர்கள் வாசலில் நிறுத்தப்பட்டிருந்தார்கள்!

கழகத்தவர்கள்தான் என்ன செய்ய முடியும்?

கூட்டம் முடிந்து திடுமென்று அண்ணாவின் கார் கடந்தது! நானும் மற்றோர் காரில் தொடர்ந்தேன்! பின்னால் லாரிகளும் எங்களைத் தொடர்ந்தன!!

நிலைமையைப் படமாக்கிப் பார் நண்பா! தேர்தலுக்கு முன்பு! காங்கிரசுக் கட்சியின் ஆட்சியில் ஒரு எதிர்க் கட்சித் தலைவரின் சுற்றுப் பயணத்துக்கு எவ்வளவு பாதுகாப்பு என்று!

பிழைத்தோம் என்றுதான் சொல்லவேண்டும்! சென்னை கோட்டூரில் பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி பிழைத்து வந்தாரே, அதுபோல!

உடுமலைப்பேட்டையில் அறிஞர் பெருந்தகையின் கார் தாக்கப்படவிருந்த நிகழ்ச்சியையும் இங்கே இணைத்துக்கொள்.

சர்வாதிகார சட்டங்கள் செயல்படும் நாட்டில் அல்ல — ஜனநாயக சித்தாந்தத்தின் பிதாக்கள் என் போரை உயிரோடேயே வைத்துக் கொண்டிருக்கிறதாகக் கூறிக்கொள்ளும் ஒரு ஜனநாயக நாட்டில்!

சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றி மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் சரியான பாதுகாப்பைத் தேடித் தந்திருந்தார்களே காங்கிரசார், அந்தக் காங்கிரசு ஆட்சியில்!

நிகழ்ச்சியை ஏடுகளுக்குத் தரவேண்டாம் என்று அப்போது அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்! வேறு எந்த ஏடுகளிலும்கூட இந்நிகழ்ச்சி திரையிடப்பெற்றே போயிற்று.

அந்த வன்முறைத் தாக்குதலில் தப்பிப் பிழைத்து வந்து, ஆட்சி அமைத்துக்கொண்டு இருப்பவர்களின் முன்னாலேதான், எதிர்க் கட்சித் தலைவர் சுப்பிரமணியனாரின் சுற்றுப் பயணத்தில் போலீஸ் அராஜகம் என்று கூப்பாடு போடுகிறார்கள்!

ஆத்தூர் நிகழ்ச்சியை நானே நேரில் பார்த்தேன்! என்று இப்போது நான் கூறுகிறேன்! கருத்திருமனர் அவர்களைப்போல! ஏதும் செய்ய முடியாத நிலையில்!

ஆனால், பதட்ட நிலை குறித்து சுப்பிரமணியனாருக்குப் போலீஸ் துறை எடுத்துக் காட்டி இருக்கிறது! எச்சரிக்கை தந்திருக்கிறது. விதைத்த வினையை அறுவடை செய்யவேண்டாம் என்று!

கேட்டிருந்தால்?

கேட்கமாட்டார்கள் அவர்கள். கேட்டு நடக்கவும் அவர்களுக்குத் தெரியாது! ஏனென்றால், சுதந்திரப் போராட்டத்தை நடத்திய பிரலாபத்திற்குரியவர்கள் அவர்கள்!

மற்றொன்று நண்பா! சென்னை சூளை மேட்டுப் பகுதி! குடிசைகள் பக்கம்! நடுப்பகல் வேளை! அண்ணா அவர்கள் தம் தொகுதிக்காக பிரசாரம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

யாரோ கவிஞராமே! அவரும் அந்தப் பகுதிக்கு அப்போது வருகிறார். நிதானத்தில் இருந்தாரா? என்பதைக் கூறமுடியாது.

யாரோ சிலர் ஓடிவருகிறார்கள்! 'துரத்து! துரத்து!' என்று ஒலி கேட்கிறது! ஜீப் வேகமாகப் போகிறது. ஒரு குடிசைக்குள்ளிருந்து ஒருவர் வருகிறார். அண்ணாவிடம், 'நீங்கள் இங்குவந்தால் தாக்கவேண்டும் என்று இரவு, கூட்டம் போட்டு முடிவெடுத்திருக்கிறார்கள். தயவுசெய்து போய்விடுங்கள்' என்கிறார்! ஜீப், வீண் கலவரத்தைத் தடுப்பதற்காகத் திரும்பிப் போய்விடுகிறது!

இதுவும் பிப்ரவரியில்தான்! காங்கிரசு ஆட்சியில் தான்! அப்போதைய எதிர்க் கட்சித் தலைவருக்குத் தான்!

ஒரு கூட்டத்தில் குழப்பம் செய்யவேண்டுமென்றால், எப்படி எப்படி முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று பயிற்சி பெற்றவர்கள், குறை கூறுகிறார்கள்—குற்றம் சுமத்துகிறார்கள். சாட்சி சொல்ல வருகிறார்கள்!

நானே நேரில் பார்த்தேன் என்று சொல்லிக்கொள்கிறார்கள்! நீதிமன்றத்திலே சாட்சி, கூண்டேறி நின்று கூறுவதுபோல!

சட்டமன்றத்துக்குள்ளே, வெளியே பேசமுடியாத சிலவற்றைப் பேசலாம் என்ற துணிவோடு பேசுகிறார்கள், பயிற்சி பெற்ற காரணத்தால்!

இத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கு தெளிவாகவும், திட்டவட்டமாகவும் பதில் அளித்திருக்கிற முதலமைச்சர் மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்கள்—

> "தேர்தலில் முறியடிக்கப்பட்ட பிறகும், காங்கிரசுக் காரர்களின் மனப்பான்மை மாறவில்லை; தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பை எற்றுக்கொண்டதை காங்கிரசுக்காரர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. காங்கிரஸ் அல்லாத பல அரசுகளைக் கவிழ்த்த பின்பு, தமிழக அரசையும் கவிழ்ப்பது எப்படி என்ற யோசனையில் இருக்கிறார்கள். இந்த மனப்பான்மைதான் பகை வளர்வதற்கு அடிப்படைக் காரணமாயிருக்கிறது.
>
> கழக அரசு, கலவரங்களைக் கண்டு வாளாவிருக்கவில்லை; ஒடுக்கத்தக்க நடவடிக்கைகள் எடுக்கத் தவறவுமில்லை.

என்று அறிவித்திருக்கிறார்கள்.

கழக அரசைக் கவிழ்த்துவிட வேண்டும் என்ற நச்சு நோக்கம் ஒன்றுதான் இத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கும், அதனை எழுப்பிக்காட்ட வாய்ப்பு நல்கும் நிகழ்ச்சிகளுக்கும் உரிய சரியான காரணங்கள் ஆகும்.

குற்றங்கள் நிகழ்வதனை, அன்றைய ஆட்சியில் தான் போலீசார் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்! லாரிகளில் ஆட்களைக் கொண்டுவந்து தலைவர்களைத் தாக்க நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

எனவே கையாலாகாத்தனத்தை மூடி மறைக்க, இதுபோன்ற வகைகளில் மக்களின் கவனத்தை திசை திருப்பிவிட்டு வெந்ததைப் பிடுங்க நினைக்கும் விபரீதங்கள், இனி தமிழக அரசியலில் விலைபோகாது என்பதனை காங்கிரசுக்காரர்களுக்கு எடுத்துக் காட்டவேண்டியது நம் அனைவருடைய பொறுப்பும்தானே நண்பா!

அன்புள்ள,

திருவாரூர்-முத்துராமன்.

# மனித இதயங்கள்

—ஜே. வி. நாதன்—

எதிரே அலைகடல், மாலைக் கதிரவன் மேற்றிசையில் வண்ணக் கோலமிழைத்துக்கொண்டிருந்தான். இன்னும் மல்லிகா வரவில்லை. அவளுடைய கடிதத்தை மீண்டும் ஒருமுறை படித்தேன். வெறும் கடிதமா, அது? "...என்னுடைய இதயம் என்பது ஒரு கோயிலானால் அதில் குடியிருக்கும் ஒரே தெய்வம் நீங்கள். நான் கண் என்றால் அதன் ஒளி நீங்கள். நான் பயிரென்றால் அதனை வளர்க்கும் மழை நீங்கள். நீங்கள் இல்லாமல் நான் இல்லை. உடலை விட்டு உயிர் பிரிந்துவிட்டால் அதன் நிலை; எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. தயவுசெய்து என்னை விட்டுப் பிரிய நினைக்காதீர்கள். உங்களுடனே தொடரும் நிழல் நான். உருவத்தைவிட்டு நிழல் பிரியுமா? உருவம் இல்லாமல்தான் நிழல்தோன்றுமா?........." உள்ளத்தையே பிழிந்துவிட்டிருக்கிறாளே, மல்லிகா!

* * *

நினைவலைகள் என்னை நனைக்க மல்லிகாவை முதன் முதலில் நான் சந்தித்த காட்சி பசுமையாக என்னுள் ஊடாடுகிறது. கல்லூரி உல்லாசப் பயணக் குழுவுக்காக ஏற்பாடு செய்த பஸ்சின் டிரைவராக என்னை அனுப்பியிருந்தார்கள். என் எதிரே வலப்புறம் அமர்ந்து நான் பஸ் செலுத்துவதை ஏதோ ஒரு அதிசயத்தைக் காண்பதுபோல் விழிகளை குழந்தைபோல மலர்த்திக்கொண்டு வேடிக்கைப் பார்த்தாள் அவள். எதிரே வேறு பஸ்கள் வரும்போது லாவகமாய் ஒதுக்கிச் செலுத்துகையில் பஸ்சின் விரைவைக் குறைக்காமல் செல்வதைக் கண்டு அவள் விழிகள் பயத்தைக் காட்டும். அவளுடைய தோழிகளிடம் நான் பஸ்சை அநாயாசமாக செலுத்துவதைப் புகழ்ந்து கூறியபோது, மல்லிகாவுக்கு அலட்சியத்துடன் பதில் வந்தது; "இது என்ன பெரிய அதிசயம்? போடி பைத்தியக்காரி!" மல்லிகாவின் விழிகள் ஒருகணம் கலங்கி நீர் ததும்பிவிட்டது. அவள் யாரென்று எனக்குத் தெரியாது. ஆனால், களங்கமற்ற உலகின் சூதுவாதுகள் அறிந்திராத பச்சைக் குழந்தை அவள் என்று பார்த்த மாத்திரத்திலேயே உணர்ந்துகொண்டு விட்டேன். மெல்லிய சிறு காற்றினைக் கூடத் தாங்க இயலாத பூங்கொடி அவள் என்பது எனக்கு நன்றாக விளங்கியது. பஸ் ஓட்டுவது என்னடீ பெரிய அதிசயம்? என்றவர்கள், வழியில் செல்லும்போது ஊர்களைப் பற்றியெல்லாம் தெளிவான ஆங்கிலத்தில் நான் விவரித்தபோது திக்கு முக்காடிப் போயினர். ஒரு காரோட்டி ஆங்கிலம் பேசுவது அவர்களுக்கு வியப்பை அளித்தது போலும்! மல்லிகா என் பேச்சை மகிழ்ச்சியுடன் கூர்ந்து கவனித்தபடி. இடையிடையே நான் கூறியவற்றில் கேள்வி போட்டு விளக்கமும் பெற்று வந்தாள். அவளிடம் ஏனோ ஒரு இனம் விளங்காத பாசம் தோன்றியது எனக்கு. பஸ் கங்கை கொண்ட சோழேச்வரத்தை அடைந்தது. கோவில் குளத்தின் பாசி படிந்த படிகளில் கால் வழுக்கி மல்லிகா விழுகிறாள். ஐயோ...என்ற கூக்குரல்...செய்வதறியாமல் அலைவரும் திகைத்து நின்ற வேளையில் குபீரென்று குளத்தில் பாய்கிறேன். நினைவிழக்கும் நிலையிலிருந்தவளைத் தூக்கி தோளில் போட்டுக்கொண்டு ஈரம் சொட்டச் சொட்டக் கரையேற்றுகிறேன். மயங்கிக்கிடந்தவளை சூழ்ந்து கூட்டம் போட்டவர்களை அதட்டி போகச் சொல்லிவிட்டு, அவசர அவசரமாக முதல் சிகிச்சைகளைச் செய்கிறேன். சிறிது நேரத்திற்குப் பின் மல்லிகா கண் திறக்கிறாள். அந்தக் குழந்தையின் கண்களில் ஒன்றுமே நடவாததுபோல் எத்தனை குறுகுறுப்பு! பிளாஸ்கிலிருந்த காபியை அவளுடைய வாயில் புகட்டுகிறேன். என் கையைப் பற்றி கண்ணில் ஒற்றிக்கொள்கிறாள் மல்லிகா. அதைஅன்போடு தடுக்கிறேன். இது அடுத்த காட்சி மறுநாள்—

"பி. ஏ. படித்திருக்கும் நீங்கள் இந்த வேலையில் ஏன் இருக்கவேண்டும்? நான் மாமாவிடம் கூறி அவருடைய காரியதரிசி வேலைக்கு உங்களை அமர்த்திவிடுகிறேன். வாருங்கள் என்னோடு. என்னுடைய நன்றியைக் காட்ட இது ஒரு சந்தர்ப்பம். தயவுசெய்து மறுக்காதீர்கள்!" என்று மல்லிகா கூறியபோது நான் சிரித்தேன். "நன்றி மனத்தளவில் நிற்பது நல்லது மிஸ் மல்லிகா. எனக்காகத் தாங்கள் சிரமப்பட வேண்டாம். இன்று என் ஒருவனுக்கு நீங்கள் பரிதாபப்பட்டு வேலை வாங்கிக் கொடுக்கலாம். ஆனால் என்னைப் போல் படித்துவிட்டு வேலையின்றித் தவிக்கும் எத்தனையோ பேர் இருக்கிறார்களே. அவர்களுக்கெல்லாம் யார் வாங்கித் தருவார்கள் தங்களுடைய அன்பிற்கு மிகவும் நன்றி!" என்று புதிய—புதிரான தத்துவம் ஒன்றை நான் பேசியபோது அவள் அழுதாள். எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது.

தாய் தந்தையற்ற அநாதை, மல்லிகா. மாமாவின் கவனிப்பில் வளர்ந்து வரும் அவள் பெயரில் நிறைய சொத்துக்களை விட்டுத்தான் சென்றார் அவள் தந்தை. பணம் பங்களா, சொத்து சுகம் — எது இருந்தென்ன? அவளுக்கு வேண்டியது உண்மையாக அன்பு செலுத்த ஒரு இதயம். அது இல்லையே!

"மிஸ்டர் இளங்கோ! என்னைப் போல் ஒரு நிலை எந்தப் பெண்ணுக்கும் வரக்கூடாது. என் மனம் எப்போதும் கவலையினால் கலங்கிக் கொண்டேயிருக்கிறது. ஏனோ தெரியவில்லை உங்களைப் பார்த்ததிலிருந்து, உங்கள் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டே யிருக்கமாட்டோமா, எந்நேரமும் உங்கள் அருகிலிருந்து உங்கள் முகத்தைப் பார்த்துக் கொண்டேயிருக்க மாட்டோமா என்று தோன்றுகிறது. என்னுடனிருக்கும் பலரையும் விட்டு உங்களிடம் மட்டும் ஏன் இந்த அன்பு? எனக்கு ஒன்றும் புரியவில்லை. உங்களுக்காவது புரிகிறதா மிஸ்டர் இளங்கோ?' என்று ஒருநாள் மல்லிகா மனம் திறந்து பேசியபோது என் உள்ளம் அந்தரத்தில் மிதந்தது. மாலையில் தினமும் டியூடி முடிந்ததும் அவள் எனக்காகக் காத்திருப்பாள். மெரினாவுக்குச் சென்று அமர்ந்திருப்போம். குழந்தையின் கொஞ்சல், சிணுங்கல் குதூகலம் எல்லாம் அவள் பேச்சில் மிளிருவதை ரசிப்பேன். அவள் மனத்தின் ஒரு மூலையிலிருக்கும் கலக்கத்தின் கறையை உற்சாகமாய் பேசித் துடைத்து தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் சிறிது

சிறிதாக வளர்த்து வந்தேன். நாட்கள் ஓடின.

அன்று—

என்னைக் கண்டதும் பொலபொலவென்று நீரைக் கொட்டின அவள் கண்கள். "நான் இருப்பதால் யாருக்கு என்னபயன்? நான் செத்துப் போகிறேன். அம்மாவும் அப்பாவும் இருக்கும் இடத்திற்குப் போய் விடுகிறேன்" என்று சிறு பிள்ளை போல அவள் கூறியபோது நான் பதறிவிட்டேன். 'என்னைக் கண்டாலே மாமாவுக்குப் பிடிக்கவில்லை. இளங்கோ! கரித்துக் கொட்டுகிறார். உங்களுடன் பழகுவது தவறாம். ஏதேதோ சொல்கிறார் அவர். இளங்கோ ஒருவர் மட்டும் இல்லையென்றால் எப்போதோ நான் போயிருப்பேன். யார் என்ன சொன்னாலும் சரி, நம்மைப் பிரிக்கவே முடியாது. என்று அவள் அழுத்தந் திருத்தமாகக் கூறினாள். என் மனம் அவளுடைய வார்த்தைகளில் பூரித்து நின்ற வேளையில் இடி ஒன்றையும் அவளே வீசினாள்: "மாமாவுக்கு அடிக்கடி ரேசுக்குப் போகப் பணம் தேவைப்படும். நான்தான் செக்கில் வேண்டும்போதெல்லாம் கையெழுத்துப்போட்டுத்தொலைக்கிறேனே, இனியும் ஏன் உயிரை வாங்குகிறார்? உம்!....எல்லாம் கல்யாணத்துக்குப் பின் இவருடைய அதிகாரம் செல்லுபடியாகிறதா பார்க்கலாம்! நான் கூறுவது சரிதானே இளங்கோ?"

"கல்யாணமா?......மல்லிகா....!'

மல்லிகா தலை குனிந்து கடைக்கண்ணால் நோக்கியபடி புன்முறுவல் செய்தாள். "எத்தனை நாளைக்குத்தான் நாம் இப்படியே இருப்பது, இளங்கோ? திருமணத்துக்குப் பின் எப்போதும் நாம் ஒன்றாகவே இருந்தாலும் மாமாவால் என்ன செய்ய முடியுமாம்?" என்று கூறினாள். திடுக்கிட்டேன் நான். 'அட கடவுளே! மல்லிகாவின் மனத்தில் இப்படியொரு எண்ணம் இருக்கிறதா? ஐயோ. களங்கமற்ற குழந்தையான அவளுக்கு தாய்க்குத் தாயாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் இருந்து அவளுடைய பலவீனமான மனத்துக்கு ஆறுதல் மொழிகளால் வலுவூட்டி அன்பு செலுத்திய என்னை அவள் தவறாகப்புரிந்துகொண்டுவிட்டாளா? என்னுடைய மாசற்ற அன்பினைக் காதல் என்று எண்ணிவிட்டாளா? உண்மை தெரிந்தால் அவளுடைய மென்மையான உள்ளம் தாங்காதே!......மனதிற்குள் புலம்பினேன். அன்றிலிருந்து மல்லிகாவைச் சந்திப்பதைத் தவிர்க்க முயன்றேன். அப்படி ஒரு எண்ணம் அவள் மனதில் உள்ளது என்ற நினைப்பு முன்போல சரளமாய் என்னுடன் பேசிப் பழக முடியாமல் தடை செய்தது. நாலைந்து நாட்களாய் அவளைச் சந்திக்கவில்லை வழக்கமான இடத்தில் காத்திருந்து ஏமாற்றத்தோடு திரும்பியிருப்பாள் மல்லிகா, என்னுடைய மாற்றத்திற்கு விடை புரியாமல் குழறிய பேதை நெஞ்சம் என் கம்பெனி விலாசமிட்டு தன் உள்ளத்தின் உணர்ச்சிகளை வார்த்தைகளாக வடித்து கடிதமாக்கி அனுப்பி வைத்தது.

எத்தனையோ தடவைகள் படித்து விட்டேன். ஏதோ ஒரு காந்தசக்தி அவ்வார்த்தைகளில் இருந்தது. கவிகளின் கனவுகளில் மட்டுமே மிதக்கக்கூடிய ஒப்பற்ற பேரெழில் படைத்த பெண்ணாய் மல்லிகாவே எதிரில் நின்று பேசுவதுபோல்—கெஞ்சிக் கதறுவதுபோல ஒரு பிரமை. அதில் அவள் அடுக்கியிருந்த ஆணித்தரமான வார்த்தைகளின் அழகு!......"உடலை விட்டு உயிர் பிரிந்துவிட்டால் அதன் நிலை! ...எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. தயவுசெய்து என்னை விட்டுப் பிரிய நினைக்காதீர்கள்; உங்களுடனே தொடரும் நிழல் நான். உருவத்தை விட்டு நிழல் பிரியுமா? உருவம் இல்லாமல்தான் நிழல் தோன்றுமா? இன்று எப்படியும் என் தெய்வத்தை நான் சந்தித்தேயாக வேண்டும். தயவுசெய்து எனக்காகக் காத்திருங்கள்! என்றும் உங்கள் மல்லிகா."

* * *

கடற்கரையில் கூட்டம் குறைந்து விட்டது. கதிரவன் சாய்ந்து, நிலவரசன் தன் பொன்னொளி வீசி பவனிவரத் தொடங்கினான். நினைவலைகளிலிருந்து விடுபட்ட நான், 'இனி மல்லிகா வரமாட்டாள். போவோமா, என்று எண்ணி முடிப்பதற்குள் எதிரே நிழலாடியது. நிமிர்ந்தேன். நிலவொளியில் தெரிந்த மல்லிகாவின் மலர் முகத்திலே எத்தனை சோகம்! என் காலடியில் சரிந்து விழுகிறாள், மல்லிகா.

"இளங்கோ!" — உயிர் விரும்புகிற இனிய ஒலி அது; மல்லிகா கேவிக் கேவி அழுகிறாள்.

"நான் எப்படியோ உங்கள் மனதைப் புண்படுத்தி விட்டிருக்கிறேன். அதனால்தான் இந்தப் பாவியைக் காணவும் மறுத்துவிட்டீர்கள். இவ்வளவு நாளாய் உங்களைப் பாராமல் உங்கள் பேச்சைக் கேளாமல் எவ்வளவு துடித்திருப்பேன் தெரியுமா? இளங்கோ! இந்தப் பிரிவுக்குக் காரணம் என்ன? நான் செய்த குற்றம் என்ன? என்பதை நீங்கள் தயவு செய்து சொல்வீர்களா? பயப்படாதீர்கள். எப்பேர்ப்பட்ட இடியான செய்தியானாலும் நான் கலங்கிவிட மாட்டேன்!"

"மல்லிகா!...நான்......நான் உன்னைக் காதலிக்கவில்லை. ஒரு தூய நட்புணர்வுடன் பழகியதைத் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டாய்!" என்று நான் கூறினேன். ஓரிருவிநாடிகளுக்குப் பின் தழதழத்த குரலில், 'என்னையே உங்களிடம் அர்ப்பணித்துவிட்டேன், நம்மிடையே நிலவும் உயரிய அன்பிற்கு எந்தப் பெயர் இருந்தால் என்ன? நீங்கள்தான் என் தெய்வம், நீங்கள் இன்றி நான் இல்லை. உருவத்தை எப்பொழுதும் தொடரும் நிழல்போல, நான் உங்கள் நிழல், உருவமின்றி நிழல் ஏது?அதைப்போல நீங்களின்றிநான் இல்லை. இனி என்றைக்குமே நாம் பிரியவேண்டாம் இளங்கோ, என்னால் அதைத் தாளவே முடியாது!" என்று அவள் நம்பிக்கையுடன் கூறியபோது என் உள்ளம் சிலிர்த்தது.

"மல்லிகா! இப்போது நான் கூறுவது உனக்கு அதிர்ச்சியைத் தந்தால் என்னை மன்னித்துவிடு. மல்லிகா, நான்......நான்......முன்பே மணமானவன்! ஒரு குழந்தையும் இருக்கிறது!..."

அதிர்ச்சியால் கணநேரம் திகைத்தாள். அதன் பின் ஏனோ அவள் அழுதாள். தேம்பித்தேம்பி அழுதாள், தனக்கே சொந்தமென்று எண்ணி இறுமாந்திருந்தவன், வேறு ஒருத்திக்கும் சொந்தம் என்ற உண்மை தந்த அதிர்ச்சியா? அல்லது இவ்வளவு நாள் ஒரு உண்மையைக் கூறாமல் மறைத்துவிட்டேனே என்ற ஆத்திரமா? மல்லிகா அழுது கொண்டேயிருந்தாள். ஒவ்வொரு பெண்ணின் அநுதாபமும் வேறு எதையும் செய்ய முடியாத வரையில் வெறும் அழுகையில் போய்தானே நிற்க முடியும்? "என்னை மன்னித்து விடு, மல்லிகா! இந்த உண்மை தெரிந்தால் உன் உள்ளம் துடிக்குமே என்று மறைத்துவிட்டேன்!"

"சரி எழுந்திருங்கள் போகலாம்!' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள் மல்லிகா, "எங்கே?" திகைப்புடன்கேட்டேன், டாக்ஸி ஒன்றைக் கைதட்டி அழைத்தாள்; இருவரும் ஏறிக்கொண்

டோம். "நாம் இருவரும் எங்கே போகிறோம் இப்போது' என்று புரியாமல் கேட்டபோது மல்லிகா சிரித்தாள். சற்று முன்வரை அழுதவள் சிரிக்கிறாளே! இவளுக்குப்பைத்தியம் பிடித்துவிட்டதா, என்ன? "உங்கள் வீட்டுக்குத்தான் போகிறோம் இளங்கோ! டிரைவரிடம் விலாசத்தைச் சொல்லுங்கள்!' என்று குண்டு ஒன்றை வீசினாள். "மல்லிகா! நீ!... நீ!..." என்று தடுமாறினேன். அவள் சிரித்துக்கொண்டே யிருந்தாள்.

கார் என் வீட்டை நோக்கி விரைந்தது.

* * *

கடந்த ஒருவாரமாக மல்லிகாவைக் காணோம். என்ன ஆனாள்? ஒருவேளை உடம்பு சரியில்லாமல் இருக்குமோ? வீடு தேடிச் சென்று அவளைக் காண வேண்டும்போல் ஒரு ஆசை. ஆனால் அந்த ஆசை வேகத்திலேயே அமுங்கிவிட்டது. என்னோடு பேசுவதே தவறு என்று கூறிய அவளுடைய மாமா என்னை நேரிலே கண்டால் என்ன கூறுவாரோ? சே, என்ன உலகம் இது! உண்மையான அன்பைப் புரிந்து கொள்ளும் சக்தி இந்த உலகிற்குக் கிடையாதோ?

கடற்கரையில் அமர்ந்து பொங்கிச் சீறும் அலைகளை வேடிக்கை பார்த்தவாறிருந்தேன். மல்லிகாவைக் காணமல் — அவளுடைய மழலை மொழியை, குழந்தையின் களங்கமற்ற பேச்சினை ரசிக்காமல்—எந்நேரமும் அவளது கண்களைப் பாராமல் பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. அதோ......அங்கே தளர் நடை நடந்து வருவது யார்...? கூர்மையாக நோக்கியவன். "மல்லிகா!" என்று வாய்விட்டே கத்திவிட்டேன்.

ஆறுமாதம் நோய்ப் படுக்கையில் கிடந்தவள்போல் இளைத்து உருமாறியிருந்தாள் அவள். முகத்திலே படர்ந்த சோகம். கண்களின் ஒளி மட்டும் குன்றவில்லை. அவள் மல்லிகாதானா? என் மனம் துடித்தது. ஏதோ விபரீதம் நடந்திருக்கவேண்டும். "மல்லிகா, என்ன இது?" என்றேன், பரபரப்புடன், அவளிடமிருந்து வெடித்துக் கொண்டு வந்தது விம்மல், "இளங்கோ, மாமா போய்விட்டார்! இந்தப் பாவியின் முகத்தில் விழிக்கவே கூடாதென்று என்னோடு "டூ" விட்டு விட்டுப் போய்விட்டார்!" இந்த உலகில் ஒரே ஆதரவாயிருந்த அவர் போய் விட்டார்!" குலுங்கிக் குலுங்கியழுதாள் மல்லிகா. பிரத்யட்ச உலகில் கவிகளின் கனவுகளிலே மிதக்கும் ஒப்பற்ற எழில்களெல்லாம் ஒன்று திரண்டது போன்ற அவளது விழிகளில் கண்ணீர். "அழாதே மல்லிகா அழாதே!" என்று ஆறுதல் கூறுகிறேன், என்றாலும் அவள் மாமா மறைந்துவிட்ட செய்தியை நம்பவே முடியவில்லை.

'இளங்கோ!" புயல்காற்றில் படபடத்த கொடிபோன்ற அவள் என் பிடிக்குள் இருந்தாள். விழிநீரைத் துடைத்துவிட்டுக் கூறினேன்; "கவலைப்படாதே, மல்லிகா, இந்தக் கைகள் உன் கண்ணீரைத் துடைப்பதற்கு எப்போதும் தயாராக இருக்கும். உன்னுடைய இன்பத்தில் எனக்குப் பங்கு தேவையில்லை. உனக்கு ஏற்படும் துன்பத்தில் முழுப் பங்கையும் ஏற்க நான் தயாராக இருக்கிறேன். நான் உன்னுடையவன். என்னை நம்பு மல்லிகா!"

அவள் நம்பிக்கை நிறைந்த பார்வை ஒன்றை என்னை நோக்கி வீசினாள். "இளங்கோ, நீங்கள் இருக்கும்போது எனக்கு என்ன கவலை? என்று கூறிவிட்டு மெய்ம்மறந்து ஆனந்தக்கண்ணீர் பெருக்குகிறாள்.

ஆங்கிலக் கவிதைத் தொகுப்பு ஒன்றைப் படிப்பதற்காகக் கையில் எடுத்தேன். உள்ளேயிருந்து இறைச்சல் கேட்டது. காபித் தம்ளரை எடுத்து வந்து முன்னால் வைத்து விட்டுத் திரும்பிய என் மனைவி ஜெயாவிடமிருந்து விம்மல் பீறிட்டது. அடுக்களையில் அம்மா சத்தம் போட்டுக் கத்தினாள்.

"...பூனை கண்ணை மூடிட்டா உலகமே அஸ்தமிச்சுப் போயிடுமா உலகத்திலே இல்லாத அதிசயமில்ல இங்கே நடக்குது; பச்சைக் கிளியாட்டம் பெண்டாட்டியிருக்கிரு, அவ கண்முன்னாலேயே இன்னொருத்தியை வீட்டுக்குக் கூட்டிட்டு வந்து கொம்மாளம் அடிக்கிறானே, பாவிப்பய. இந்தக் கர்மத்தையெல்லாம் பார்த்துத் தொலைக்கணுமின்னு என் தலையெழுத்து என்று உச்சஸ்தாயியில் திட்டுவது யாரையென்று எனக்குப் புரிந்துவிட்டது. மல்லிகாவையும் என்னையும் சேர்த்து விபரீதக் கற்பனையில் ஈடுபட்டதன் பலன்; அம்மா கத்துகிறாள். அவள் வயதானவள்; மல்லிகாவைப் பற்றித் தவறான அபிப்பிராயம் பதிந்துவிட்டது; அதனால் தன் மனம் போனபடியெல்லாம் பேசுகிறாள். போகட்டும் ஆனால் இவளுக்கென்ன வந்தது திரென்று!"

"ஜெயா, நீ ஏன் அழுகிறாய்?" வியப்புடன் கேட்டேன், "அத்தான் என்று என் காலடியில் விழுந்தாள் அவள். "நீங்கள் பெரியவர், நான் உங்களுக்குச் சொல்ல என்ன இருக்கிறது? மல்லிகாவையே மணந்து கொண்டு திருப்தியாக வாழுங்கள். ஆனால், இந்த ஏழை ஜெயத்துக்கும் உங்கள் உள்ளத்தில் கொஞ்சம் இடம் கொடுங்கள். எனக்கு அதுவே போதும்! 'கோ'வென்று கதறியே விட்டாள் பேதை. அம்மா அவள் நெஞ்சிலும் விஷத்தைத் தூவிவிட்டிருக்கிறாள். எனக்கு ஆத்திரமாக வந்தது. "ஜெயா! என்ன இது சிறுபிள்ளைபோல! நீங்கள் நினைக்கிற மாதிரி மல்லிகா என்னுடன் தவறாகப் பழகவில்லை என்று ஆயிரம்தடவை சொல்லியும் கேட்க மாட்டேன் என்கிறாயே? அம்மா தான் புரியாமல் பேசுகிறாள் என்றால், உனக்குமா அறிவில்லை?' என்று கூச்சல் போடவே, அழுதபடியே உள்ளே சென்றுவிட்டாள் அவள்.

அன்றைக்கு, மல்லிகா திடுதிப்பென்று 'கிளம்புங்கள், உங்கள் வீட்டுக்குப் போகலாம்" என்று வந்தாலும் வந்தாள், பெரிய தலைவலி இங்கே ஆரம்பமாகிவிட்டது. வந்தவள் "அக்கா! அக்கா!" என்று என் மனைவியைச் சுற்றிச் சுற்றி வந்தாள். அன்பைப் பொழிந்து தள்ளினாள். என் அம்மாவை அவளும் அம்மாவென்றே அழைத்தாள். என் மகன் மாறனைக் கட்டியணைத்துக் கொஞ்சினாள். முத்தம் கொடுத்து கன்னத்தைப் புண்ணாக்கினாள். வெகுநேரத்துக்குப் பின் பிரிய மனமின்றி அவள் சென்றாள். என் தாய் என்னை சந்தேகப் பார்வையோடு கேள்விகளால் துளைத்தெடுத்தாள். "ஐயோ, அம்மா! அவள் என் சகோதரிபோல நீ நினைக்கிற மாதிரியல்ல, அவள் ஒரு குழந்தையம்மா குழந்தை!" என்று பலதடவை கூறிவிட்டேன், கேட்பதையெல்லாம் கேட்டுவிட்டு "ஐயோ பெண்ணே, மோசம் போனாயே அம்மா! இந்தப் படுபாவிப் பயல் இப்படிக் கெட்டலைந்து போவான்னு எனக்குத் தெரியாமல் போச்சே!' என்று ஜெயாவை—என் மனைவியை — கட்டிக்கொண்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள்.

மல்லிகா தினமும் வந்தாள். என்னோடு பேசுவதில் என் மனைவியோடு உரையாடுவதில் குழந்தை மாறனைக் கொஞ்சுவதில் அவள் அமைதி கண்டுவந்தாள். அவள் வந்து போகும்வரை சத்தம் கேட்

காது. எனக்குக் கோபம் வந்தால் எப்படியிருக்கும் என்பது என் தாய் அறியாததா? மல்லிகா வீட்டிலிருக்கும்போது அண்டை அயல் வீடுகளுக்குச் சென்றுவிடுவாள் அம்மா. ஒரு விரோதியைப்போல மல்லிகாவை அவள் பாவித்தாள். மல்லிகா வீட்டை விட்டுப் போக வேண்டியதுதான். மீண்டும் தலைவலி தொடங்கிவிடும்.

* * *

தலையைப் பிய்த்துக் கொண்டேன். ஆத்திரத்தோடு எழுந்தேன். 'அம்மா, இப்போது வாயை மூடப் போகிருயா, இல்லையா?' என்று கத்த வாயைத் திறந்தேன். 'சே, என்ன மடத்தனம்? அறியாமல் தவறு செய்கிருள் அம்மா, அவளிடம் உள்ள அறியாமையைத் தவிர மற்றபடி அவள் நல்லவள் தானே. அவள் மனதைப் புண்படுத்தலாமா? பெற்று வளர்த்து ஆளாக்கியவள் பேசி என் மனதை வாட்டுகிருள். பேசட்டும்! இனி மேல் மல்லிகாவை இங்கே வரக் கூடாது என்று கூறிவிட வேண்டும். ஆம், அதுதான் சரி!' இப்படி எண்ணியதும் பேசாமல் அமர்ந்துவிட்டேன். இங்கே வராதே என்று எந்த வாயால் மல்லிகாவிடம் கூறுவேன்? 'இளங்கோ! எனக்கிருக்கும் ஒரே ஆறுதல் நீங்களும், உங்கள் குடும்பமும்தான், இங்கே வரும் சில நிமிடத்தில் கிடைக்கும் அமைதிக்கும் தயவுசெய்து தடைபோட்டு விடாதீர்கள் இளங்கோ!' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாளே, மல்லிகா அப்போது 'இது உன் வீடு மல்லிகா. உன் மகிழ்ச்சியே என் மகிழ்ச்சி. நினைத்தபோதெல்லாம் என் வீட்டுக்கு நீ வரலாம்!' என்று கூறினேனே — அதே வாயால் 'நீ வராதே!' என்று எப்படிக் கூறுவது? அதோடு உயிரையே விட்டுவிடுவாளே அவள்.

'அப்பா!...அப்பா!...' என்ற மழலைக் குரல் கேட்டது, குழந்தை மாறன் என் வேட்டியைப் பிடித்திழுத்தான், 'என்னடா கண்ணு?' என்று அவனைத் தூக்கிக் கொஞ்சினேன். 'அத்தே......அத்தேப்பா! அழுது...அழுதுகிட்டே போயித்தாங்கப்பா!' என்று கண்ணைக் கசக்கினுன் குழந்தை — அத்தையா?... யார்? ...... மல்லிகாவையல்லவா மாறன் குறிப்பிடுகிருன். அழுது கொண்டே போனுளா ஏன்?...... ஓடிப்போய் கதவைத் திறந்து வாசலில் எட்டிப் பார்த்தேன். டாக்ஸி ஒன்று தெருமுனையில் திரும்பியது.

அதில் ஒரே ஒரு கணம் கண்ணீர் மல்கிய விழிகளுடன் மல்லிகாவின் மலர்முகம் தெரிந்து உடனே மறைந்தது. 'அப்பா!' என்று சிணுங்கிய மாறனின் கரத்தில் வெண்மையாய் ஏதோ தெரிந்தது. ஒரு காகிதம், கசங்கிக் காட்சியளித்த காகிதத்தை வாங்கி அவசர அவசரமாய் பிரித்தேன். மல்லிகா வந்து வாசலிலேயே நின்று இதை எழுதிக் குழந்தையின் கையில் கொடுத்துவிட்டுப் போயிருக்கிருள். ஏன்? எது நடக்கக் கூடாதோ, அதுவே நடந்துவிட்டதா? அம்மாவின் இரைச்சல் அவள் காதில் விழுந்துவிட்டதா, ஐயோ!'

'குழந்தை, குழந்தை, என்று குறிப்பிடுவீர்களே இளங்கோ, அந்தக் குழந்தை இன்று உலகை ஓரளவு புரிந்துகொண்ட நிலையில் எழுதும் கடிதம் இது. வாழ்க்கையில் ஏமாற்றமடைபவர்கள் நிறையப் பேர் இருப்பார்கள். ஆனல் என்னைப் போல் ஏமாற்றத்தையே வாழ்க்கையாக அடைந்தவர்களின் நிலை மிகக் கொடியது. இல்லையா இளங்கோ? இளங்கோ! என் நெஞ்சக் கோவிலின் சிலையாய் உங்களை வழிபட்டு வந்தேன். இனியும் அவ்வாறே வழிபடுவேன். அதை யாராலும் தடுக்க முடியாது. என்னுல் உங்களுடைய வாழ்வில் புயல் எழுவதை நான் பொறுக்க முடியாது. உங்கள் வாழ்வில் நான் இனி என்றுமே குறுக்கிட மாட்டேன். போகிறேன். நான் உங்களிடமிருந்து விலகுகிறேனே ஒழிய உங்கள் நினைவிலிருந்து விலக விரும்பவில்லை. உங்கள் தைரிய மொழிகளைக் கேட்டவள் கோழை போல் தற்கொலை செய்துகொள்ள மாட்டேன். என்னைப் போன்ற தாய் தந்தையில்லாத அநாதைகளுக்கென்று விடுதிகள் ஆசிரமங்கள் எத்தனையோ இருக்கின்றன. புனிதமான சேவையில் என்னை அர்ப்பணித்துக்கொள்ள முடிவு செய்துவிட்டேன். அதற்கு முன் ஒரு காரியத்தைச் செய்துவிட்டுப் போகிறேன். தயவுசெய்து இதை நீங்கள் மறுக்கக்கூடாது. என் தந்தை எனக்கு வைத்துவிட்டுப் போன சொத்துகளின் பாதியை அநாதை விடுதி ஒன்றுக்கும், மறுபாதியை குழந்தை மாறனுக்கும் எழுதிவைக்கிறேன்.'

என்றும் உங்கள், 'மல்லிகா'.

பிரித்த காகிதத்தோடு சிலையாய் அமர்ந்துவிட்டேன், நான். உருவத்தைவிட்டு நிழல் பிரியுமா? என்று ஆயிரம் தடவை கேட்டாயே மல்லிகா, இன்று உருவத்தைவிட்டு நிழலைப் பிரிக்கும் சக்தி இந்தப்பாழும் உலகிற்கு இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு பிரிந்து சென்றுவிட்டாயே. மல்லிகா!......என்னை விட்டுப் பிரிந்துவிடாதீர்கள்' என்று சொன்னுய், இன்று நீயே பிரிந்து சென்றுவிட்டாய். "மல்லிகா!...... மல்லிகா!" என் உள்ளம் அவளை நினைத்து அலறியது, கன்றை நினைத்துக் கதறும் பசுவினைப்போல. ஆமாம்! நான் அவளுடன் கொண்டிருந்த அன்பு காதலன் காதலி அன்பு அல்ல; சகோதரன் சகோதரி பாசமல்ல; இறைவன் அடியார் பக்தி அல்ல; ஒரு தாய் குழந்தையிடம் காட்டும் பரிவு அது. தாயில்லாத குழந்தைக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்தேன். இந்த உலகின் கண்கள் அதை விபரீதக் கண்ணேட்டமிட்டு அன்புநெஞ்சங்களைப் பிரித்துவிட்டது கடவுளே, என்ன செய்வேன்?

என் மனைவி ஜெயாவிடம் மௌனமாக மல்லிகாவின் கடிதத்தை நீட்டுகிறேன். படித்துவிட்டு, 'என்னை மன்னித்து விடம்மா, மல்லிகா! உன்னுடைய உயர்ந்த தன்மையைப் புரிந்துகொள்ளாத பேதையாய் இருந்துவிட்டேன்...!' என்று அவள் புலம்புகிருள்.

எதிரே மேசையில் கிடக்கும் ஆங்கிலக் கவிதைத் தொகுப்பைப் பிரிக்கிறேன். பிரித்த இடத்தில் கவி காலரிட்ஜின் கவிதையொன்று காணப்பட்டது. அதில் வரும் ஆங்கில வரிகளை என் வாய் முணுமுணுக்கிறது. சந்திக்கிரேம், அறிகிரேம், அன்பு செய்கிரேம், அதன் பின் பிரிகிரேம் மிகப் பெரிய பல மனித இதயங்களின் சோகக் கதை இதுதான்!

அறையெங்கும் மல்லிகை மணம் குப்பென்று வீசுகிறது. மனித இதயங்களின் விசித்திரத்தை வியந்தபடி என் மனைவி, உள்ளே போகிருள்!

✽

### திறமை இல்லாதவன்?

அளவுக்கு மீறிப் பேசுவது என்பது தற்பெருமைக்கு அடையாளம்; மிதமிஞ்சிப் பேசுகிறவன் செய்கையில் குறைவுள்ளவனக இருப்பான்.

*—சர். வால்டர் ராலே*

# "ஆனை"

—இறைவன்—

தேரோடும் திருவிழாவைக் காண வேண்டி
சென்றார்கள் மகிழ்ச்சியுடன் பொன்னன் பொன்னி!
காரோடும் கூந்தலிலே பொன்னன் நெஞ்சை
கடிமலராய் தான்சூடி நடந்தாள் பொன்னி!
ஏரோடும் பின்நடக்கும் உழவன் போன்று
எழில் பார்த்துப் பின்நடந்தான் பொன்னன் ஆங்குப்
போரோடும் ஆனையொன்று நாமம் போட்டு
புறப்பட்டு வரக்கண்டு ஒதுங்கி நின்றார்!

"கோட்டானைப் பார்!"என்றான் பொன்னன்! பொன்னி
'கோட்டானா எங்கிருக்கு?" என்று சொல்லி
நீட்டுயர்ந்த மரக்கிளையைப் பார்த்தாள்! "தட்டான்
நீட்டாதப் பொன்னிழையே! இந்த ஆனை
கோட்டானை! கோடென்றால் கொம்பு! தந்தக்
கொம்புள்ளக் காரணத்தால் இதுகோட் டானை!
காட்டானை பார்த்தாயா?" என்றான்! பொன்னி
காட்(டு)ஆனை இதுதானே? தெரியும்!" என்றாள்!

"கரி'யென்றும்; 'மாதங்கம்' என்றும்; கொம்புக்
'களிறெ'ன்றும்; 'வாரணமே' யென்றும்; எங்கும்
திரிகின்ற தும்பியென்றும்; களப மென்றும்
செறுகம்பு மாவென்றும்; மாற்றார் வாழ்வைப்
பிரிக்கின்ற பகடென்றும்; வேழ மென்றும்;
பெயர்குறிக்கும் சொல்லெல்லாம் இவ்வா னைக்கே
உரித்தான பெயரென்றான்" பொன்னன்! பொன்னி
ஓவென்று வாய்பிளந்துக் கேட்டி ருந்தாள்!

"இருந்தாலும் இறந்தாலும் ஆயி ரம்பொன்
என்பதினால் இதுவோர்மா தங்கம் என்று
கருதிபெயர் வைத்தார்கள்" என்றான்! பொன்னி
"கைமா'வென் றேபெயரேன் வந்த தென்றாள்!

"பெருநிதியே! மாவென்றால் விலங்கே யாகும்!
பெருங்கையை உடையயிம்மா கைமா என்றார்!
கரும்பொடிக்கும் அக்கையே ஆனைவ ரையும்
களிப்போடு துதிக்கும்கை! துதிக்கை யாகும்!"

"பெற்றெடுத்தக் குழந்தையினை ஆனை மீது
பெற்றோர்கள் ஏற்றுவதேன்? 'என்றாள்!" என்கைச்
சுற்றுக்கே இடையளித்தப் பெண்ணே! புத்திச்
சுமையற்றோர் சொல்வார்கள் பிள்ளை கள்பால்
தொற்றிநிற்கும் நோயெல்லாம் தீரு மென்றும்
தோஷமெல்லாம் ஒழியுமென்றும்! ஆனால் போரில்
வெற்றிக்கே முதலாகும் ஆனை யேறி
வீரனாதல் என்பதையே இதுகுறிக்கும்!"

"வில் பயிற்சி; வாள் பயிற்சி; குதிரை யேற்றம்
வேல்பயிற்சி அனைத்திருந்தும் ஆனை யேற்றம்
இல்லையென்றால் அவ்வீரம் வீணே யாகும்!
இதனாலே முன்னோர்கள் குழவியர் பால்
சொல்லாடும் இளவயதில் பயத்தைப் போக்கித்
துணிவுதனை ஏற்படுத்த ஆனை யேற்றி
உல்லாச ஊர்வலமாய் வரச் செய்வார்கள்!
உளவீரம் குழந்தையர்பால் ஊட்டு வார்கள்!

அச்செயலே நாட்செல்ல காலஞ் செல்ல
ஆயிற்று இச்செயலாய்! என்றான் பொன்னன்!
நொச்சியிலை விழிபதித்தப் பொன்னி! "உண்மை
நோக்கமிது பொருளிதுதான் என்றால், அத்தான்!
பச்சரிசி பல்காட்டும் பாலைப் பெற்று
பயம்போக்க ஆனையேற்றி மகிழ்வோம்!" என்றாள்!
"அச்சச்சா! என்றெ"ன்றான் பொன்னன்! பொன்னி
"ஆறுதிங்கள் பொறு"யென்றாள்! தலைக்க விழ்ந்தாள்!

4-ம் பக்கத்தொடர்ச்சி

போய்விடவில்லை என்று கொஞ்சம் மன ஆறுதலடையும் வாய்ப்புண்டாக்கி இருக்கிறது.

எதிர்க் கட்சிகளின் பிடிக்கு ஆட்சி அதிகாரம் சென்றுவிட்டதை, ஒப்புக்கொள்ள முடியாத நெஞ்சங்களின் பித்தலாட்டச் செயல்களே. பல மாநிலங்களில் குழப்ப நிலையைத் தோற்றுவித்துள்ளன.

இதனைக் காரணங் காட்டி, ஒவ்வொரு மாநிலமாக குடியரசுத் தலைவரின் நேரடி அதிகாரத்துக்குக் கொண்டுவரப் படுவதாயின், எதிர்காலத்தில் எத்தனை மாநிலங்கள், இந்த இரும்புப் பிடியிலிருந்து தப்பும்? என்றே சந்தேகப்பட வேண்டி இருக்கிறது.

குழப்பங்களை மூட்டிவிட்டு. அதிலே குளிர் காய நினைக்கும் காங்கிரஸ், தன் மனப்போக்கை மாற்றிக் கொண்டேயாக வேண்டும்; இன்றேல் மத்திய அரசும் கூட இதுபோன்ற ஒரு நெருக்கடிக்கு ஒருநாள் ஆளாக நேரும்!

அப்போது இந்திய ஜனநாயகத்தையும், அதன் விபரீதத்தையும் பார்த்து வெளிஉலகம் காரி உமிழும்; கைகொட்டிச் சிரிக்கும் நிலை தானாகவே உருவாகி விடக்கூடும்.

மேற்கு வங்கத்தைப் பொறுத்த மட்டில் அனாமதியாய் இயங்கிக்கொண்டிருந்த அஜய் முகர்ஜியை, காங்கிரசுக்கு மீண்டும் இழுக்க, காங்கிரஸ் மேற்கொண்ட முதன் முயற்சியின் எதிரொலிதான், இன்றைக்கு அங்கே குடியரசுத் தலைவர் ஆட்சி என்று பிரகடனம் செய்து, ஆட்சி அதிகாரத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு விபரீதத்திற்குக் காரணமாகும்.

மே. வங்கத்துக்கு, உள்விவகாரங்கள் எத்தனை எத்தனையோ இருந்தும், அவற்றில் எல்லாம் கவனத்தை செலுத்த முடியாத அளவுக்கு 'ஆட்சி—அதிகார'ப் போக்கு, ஆகக்கிரமித்துக் கொண்டுவிட்டிருக்கிறது.

விரைவில் மறுதேர்தல் நடைபெறக் கூடும் என்றும் நம்ப இடமிருக்கிறது. அப்போதாவது, மே. வங்க மக்கள் நிலையான அமைதிக்கு, வழி தேடிக்கொள்ளவேண்டும்; ஜனநாயகக் கொலை புரிந்துவரும் காங்கிரசுக்கு சரியான பாடம் புகட்டுவதாய் அந்த 'வழி' அமைந்திட வேண்டும்! ●

முகப்பில்:

காஞ்சியில் 9-ம் பக்கத்தில் வெளிவந்துள்ள
"மனித இதயங்கள்" கதையில்
வரும் ஒரு காட்சி.

ஒரு பக்கத்திலே சுப்பிரமணியம் இந்தியை ஒழித்துவிடுவதா?என்கிருர். பக்தவத்சலமோ எங்கே ஒழித்தார்கள்? என்கிருர். காமராசர் மௌனமாக இருக்கிருர். காமராசர் இந்த விஷயத்திலே கொஞ்சம் கெட்டிக்காரத்தனமாகக்கூட இருக்கிருர்.

நான் சுப்பிரமணியத்திடம் கொஞ்சம் அதிகமாக எதிர்பார்த்தேன். மிகுந்த நாகரிகமான மனிதர் — படித்தவர் — பண்பாளர் — மிக உயர்ந்த பொறுப்புக்களிலே இருந்தவர் — மேல்நாடு பல சுற்றியவர் — அமெரிக்க நாட்டு, ரஷிய நாட்டு அதிபர்களிடத்திலே கை குலுக்கியவர் — ஆகவே நல்ல நாகரிக மேம்பாட்டோடு விளங்குபவர்—அவர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக வந்திருப்பது தமிழகத்திலே ஜனநாயகம் கொஞ்சு நடைபோடும் என்ற நம்பிக்கை அளிக்கவல்லது என்றெல்லாம் நாங்கள் எண்ணியதுண்டு. ஆனல் சுப்பிரமணியம் அவர்கள் இவ்வளவு பெரிய ஏமாற்றத்திற்கு எங்களை ஆளாக்குவார் என்று எதிர்பார்க்கவே இல்லை.

கொஞ்சம் முன்கோபி அதுவும் புரியும்; அவரே சொல்லியிருக்கிருர் சட்டமன்றத்தில் பல முறை. அவர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்றபோதுகூட நான் ஊழியர்களிடையே அதிகமாக கலந்து பேசவில்லை என்ற புகார்கள் வரும்; இனிமேல் அதனை நான் திருத்திக்கொள்கிறேன் என்றெல்லாம் தம்முடைய தவறுகளுக்கு விளக்கமளித்திருக்கிருர். ஆனல் வந்ததும் வராததுமாக தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சரித்திரப் பிரசித்தி வாய்ந்த ஒரு தீர்மானத்தை—தமிழக மக்கள் கொதிப்படையத் தக்க அளவுக்கு—மாணவர்கள் கொதிப்படையத் தக்க அளவுக்கு ஒருபெரிய அரசியல் மோசடி என்று கூறியிருக்கிருர். அவர் தாக்கட்டும்—இது தேவையில்லையென்று சொல்லட்டும்;இப்படி செய்திருக்கலாமா என்று கேட்கட்டும். அரசியல் மோசடி என்கிற வார்த்தையே நாடு கொந்தளித்துப் போயிருக்கிற நேரத்தில் பயன்படுத்தத்தான் வேண்டுமா?

இப்படிப்பட்ட ஒரு நிலைமையில் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கொதிப்பான நேரத்தில் இப்படி நடந்து கொள்ளலாமா என்பதுதான் நம்முடைய கேள்வி. காங்கிரசார் கேட்கிருர்கள்—பொதுமக்களிலே கூட சிலர் சந்தேகப்படலாம். என்ன இருந்தாலும் டெல்லி மந்திரி சென்னை வந்தார்—அதுவும் தமிழகத்து மந்திரி-அவர் மீது கல் போடலாமா என்று; கல் போடப்பட்டதைக் கண்டித்து மறுநாளே பேரறிஞர் அண்ணு ஒரு கண்டன அறிக்கை வெளியிட்டார். 'நான் வேதனைப்படுகிறேன், ஜனநாயகம் காப்பாற்றப்படுமா?—என்று துடிக்கிறேன்; என அண்ணு கல்வீசப்பட்ட அந்த நிகழ்ச்சிக்காக வருத்தம் தெரிவித்தார்.

நான் உங்களைக் கேட்கிறேன், நண்பர்களே நம்முடைய கூட்டங்கள் இந்த இருபதாண்டுக் காலத்திலே எத்தனை கலைக்கப்பட்டிருக்கின்றன!

மதுரை மாநாட்டுப் பந்தல் அடியோடு கொளுத்தப்பட்டு-மாநாட்டுக்கு வந்திருந்தமாதர்களும் மாணவர்களும் நையப்புடைக்கப்பட்ட செய்தியெல்லாம் மறந்து போய்விட்டதா? மாநாட்டுக்கு வந்திருந்ததாய்மார்கள் சேலைகிழிக்கப்பட்டுஇரவிக்கைகள் கிழிக்கப்பட்டு வைகைப் பெருவெளியில் மானபங்கப்படுத்தப் பட்டதை நாம் மறந்து விட்டோமா! ஓடஓட அடித்து விரட்டினீர்களே பெண்களை — மறந்துவிட்டதா? மன்னிக்கவேண்

# கைமாறிப்போச்சு?

டும் பெயரைச் சொல்வதற்காக; இன்று காங்கிரசிலே இருக்கும் சம்பத் கையிலே தடிகொண்டு தாய்மார்களையெல்லாம் தாக்கிய காங்கிரஸ்காரர்களை விரட்டியடிக்கவில்லையா?

ஒரு வருத்தம்-ஒரு ஆழ்ந்த அனுதாபம்—போனல் போகட்டும் என்று ஒரு கண்டனம் காங்கிரஸ் ஆட்சியிலே தெரிவிக்கப்பட்டது உண்டா?

சென்னையிலே சைதாப்பேட்டைத் தொகுதி தேர்தல் நடந்த போது முதல் நாளிரவு என்னை காங்கிரஸ் குண்டர்கள் துரத்திச் சென்று இரவெல்லாம் நான் ஒரு குடிசையிலே தங்கியிருந்து என்னைக் காப்பாற்றுவதற்கு போலீசாரே இல்லாமல் எந்த நேரத்திலும் கொலை செய்யப்படுவேன் என்கிற அளவுக்கு நிலைமை முற்றி மறுநாள் காலை வந்து கழகத் தோழர்கள் என்னை மீட்டுச் சென்ருர்களே அது குறித்து ஒரு அனுதாபம் உண்டா?

பத்தாயிரம் பேர் வந்திருந்தால் இரண்டாயிரம் பேர் போலீசார் என்று கொண்டு ஆளுக்கு ஐந்து பேரை கண்காணித்துக் கொண்டிருக்க முடியாது.

யாரோ ஒரு விஷமி—ஒரு கொடியவன்—ஒரு வன்முறையாளன்–கல்லை வீசி விடுவதுண்டு. ஏன் சென்ற தேர்தலுக்கு முன்பு ஒரிசா மாகாணம்—காங்கிரசாரால் ஆளப்பட்ட மாகாணம் — அங்கு இந்திராகாந்தி அம்மையாருடைய மூக்கில் அடிப்பட்டு—அவர்கள் டில்லிக்குத் திரும்பினர். சிரிப்பதற்காகச் சொல்லவில்லை–சிந்திப்பதற்காகச் சொல்கிறேன்—காங்கிரஸ் மாநிலத்தில் காங்கிரஸ் பெருந்தலைவர்களில் ஒருவரான இந்திராகாந்தி அம்மையார் மீது கல் வீசப்பட்டதே அதற்கு போலீஸ் உடந்தையா?

டெல்லிப் பட்டணத்தில் அ. இ. கா. க, தலைவர் காமராசர் இருந்தபோது அவர் வீட்டுக்குள்ளே சாதுக்கள் நடத்திய போராட்டத்தின் காரணமாக திரிசூலம் — கம்பு—கத்தி—அரிவாள்—சம்மட்டி போன்ற சாதுக்கள் ஏந்திய ஆயுதங்கள் இந்த ஆயுதங்களால் தெருவெல்லாம் பிணங்கள் குவியக் குவிய—இது போதாதென்று காமராசரைப் பிணமாக்க அவருடைய வீட்டுக்குள் புகுந்து காமராசரைப் பிடித்து இழுத்தபோது ஓடி சென்று வீட்டிலிருந்து ஒரு வாலிபன் அவரைக் காப்பாற்றினுன். அந்த வாலிபனுடைய பெயர் கோதண்டபாணி — தென்ஞற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன் தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்.

சட்டம் — அமைதி—ஒழுங்கு ஏன் அங்கு காமராசரை காப்பாற்ற முடியவில்லை—போலீஸ் என்ன செய்தது அங்கெல்லாம்?

இந்த ஆண்டு ஜனவரி முதல் நாளன்று மத்திய அரசு கொலுவிருக்கும் டில்லிப்பட்டணத்தில்—விரல் சுண்டியழைத்தால் இராணுவம் வருமே அந்தப் பட்டணத்தில் பொது இடத்தில் பத்து வாலிபர்கள்-குடித்துவிட்டு கார்களை மறித்து அதிகாரிகளின் மனைவியையும் வெளிநாட்டுத் தூதுவரின் மனைவியையும் மானபங்கப் படுத்தினுர்களே அப்போது இந்தச் சட்டம் அமைதி ஒழுங்கு எங்கே போயிற்று தம்பி?

இப்போது கேட்கிருயே தமிழ் நாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிரு நிகழ்ச்சிகள் நடைபெற்றதும் சட்டம் போச்சு—அமைதி போச்சு என்கிறீர்களே—எங்கே சட்டம் போச்சு—உன் கையிலிருந்து எங்கள் கைக்கு போச்சு! அதைத் தவிர வேறெங்கும் போகவில்லை!

தஞ்சையில். அமைச்சர் மு. கருணாநிதி.

# இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

## மாணவர்கள் கிளர்ச்சிதானு இவை?

கோவை மாவட்டமெங்கணும் மீண்டும் கல்லூரிகள் மூடப்பட்டிருக்கிறதாம்! மாவட்டமெங்கும் பரவலாக குழப்பம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குழப்பங்களின் பின்னுல், ஏதோ ஒரு 'சக்தி' திட்டமிட்டுச் செயல் படுவதாகவே யூகிக்கவேண்டி இருக்கிறது. கல்லூரிகள் மூடப்படும் அளவுக்கு மாணவர்களது நடவடிக்கைகள் அமைவது மாணவர்களுக்கு என்றுமே நல்லது அல்ல. மாணவர்களது 'உரிமை'யும் 'கோரிக்கை'களும் மதிக்கப்பட வேண்டியது தான்! ஆனுல் அதற்கும் ஒரு அளவு இருந்தால்தான் அது, மாணவர்களுக்கும் நல்லதாக இருக்கும்; நாட்டுக்கும் நல்லதாக ஆகும்.

## இடதுசாரிகளின் இடக்குத்தனம்?

இடதுசாரி கம்யூனிஸ்டுகளின் தொல்லை, காஞ்சிபுரம் கொசுத் தொல்லையை விடக் கூடிக்கொண்டே போகிறது. தேர்தல் கூட்டின் மூலமாகவே, தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டவர்கள் அவர்கள். கழகத்தோடு அந்த இணைப்பு ஏற்படாமல்போய் இருந்தால், இன்று இருக்கும் இடமே தெரியாமல் போயிருப்பார்கள். நன்றியுடன் நடந்து அரசியல் நடத்தவேண்டியவர்கள், நன்றி காட்டாவிட்டாலும் தொல்லையாவது கொடுக்காமல் இருக்கலாம். 'கூடிக் கெடுப்பது' என்பது கம்யூனிஸ்டுகளுக்கு கொள்கைச் சித்தாந்தமாக இருக்கலாம். தொழில் துறையில் அமைதி கெடவும், உற்பத்தியில் தாமதம் ஏற்படவுமான நிலையை இடதுசாரிகள் திட்டமிட்டுச் செய்து வருகிருர்கள். நாடெங்கும் பரவலாகச் செய்கிருர்கள்! அரசியல் அழுக்காறு இதற்குக் காரணமாக இருக்குமானுல், எதிர்காலம் அவர்களைப் பொறுத்தமட்டில் இருட்குகையே யாகும்! தமிழக அரசின் இதயத் தூய்மையைப் புரிந்துகொண்டு செயல்படும் புத்தியை சூ - பென் லாய் அவர்களே! இடதுசாரி கம்யூனிஸ்டுகளுக்கு அருளுவீராக!

## ஈழத்துக்கு ஒரு எச்சரிக்கை!

தாயைப் பழித்தவனை தாய் தடுத்தால் விடு; தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடாதே என்பார்கள்! அறிஞர் அண்ணு அவர்களைக் குறை காண்போர்—குறை கூறுவோர், அவர்தம் அரசியலைத்தான் குறை கூறுவார்களே தவிர பண்பாட்டில் குறை காணமாட்டார்கள் தமிழகத்தில்; இந்தியத் துணைக் கண்டத்தில். ஈழம் அதனைச் செய்திருக்கிறது என்று அறியும்போது ஆத்திரம் வருகிறது. அறிஞர் அண்ணு அவர்கள், ஒரு அமெரிக்க ஏஜண்டு என்று பேசி இருக்கிருராம் இலங்கை அரசியலில் அல்லாடிக்கொண்டிருக்கும் திரு. தொண்டமான்! ஈழத் தமிழர்களைக் காட்டிக் கொடுத்து வாழ்வு நடத்துபவர் என்று ஈழத்திலேயே புகழப்படுபவர் இவர். இவர் தமிழக அரசியலில் தலையிட வருவது தற்குறித்தனம் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது.

## 'இந்தி'யர்க்கு ஆபத்து!

தமிழக மக்கள் தொகை எண்ணிக்கை குறைவு பட்டுப் போனதால் இரண்டு எம். பி. க்களை இழந்த நிலையில் இருக்கும்போது, உத்திர பிரதேசம் மக்கள் தொகையை உயர்த்திக்கொண்டே வந்திருக்கிறது! எம். பி.-க்களும் அதிகம்தான்! ஆனுல், மக்களைப் பெறவிருக்கும் மகராசிகளுக்கு அந்த அரசு, 'அடுத்த ஆண்டிலிருந்து மூன்று குழந்தைகளுக்கும் அதிகமாகப் பிள்ளை பெற்ருல், அரசுச் சார்பில் அவர்கட்குக் கொடுக்கப்படுகின்ற அனைத்து சலுகைகளும் பறிக்கப்படும்' என்று புதிய அறிவிப்பைச் செய்திருப்பதானது, இந்தி வெறியர்களுக்கு ஆத்திரமூட்டக்கூடிய செய்தியாகும். உ. பி. யில் மக்கள் தொகை உயர்ந்தால். இந்தி பேசுவோரின் எண்ணிக்கையை மிகுதிப் படுத்திக் காட்ட முடியும்: இப்படி சட்டம் போட்டுத் தடுத்தால் இந்தியின் எதிர்காலம் என்னுவது என்று அங்கலாய்க்கக் கூடுமே!

## இப்படியும் ஒரு அதிகாரி இருக்கிருர்!

ஆந்திர மாநிலத்தில் வரிவசூல் ஆயத்தின் முதல் உறுப்பினராகப் பணியாற்றிவந்த திரு. வி. கே. ராவ் என்பவர். விடுமுறையிலிருந்துவிட்டு மீண்டும் பணியாற்ற வந்தாராம்! தாம் விடுமுறையிலிருந்த நாட்களுக்கு உரிய சம்பளம் தரப்பட வேண்டும் என்று கோரி, தனது சம்பளப் பட்டியலையும் அனுப்பி இருந்தாராம். சென்ற வேகத்தில் பட்டியலும் திரும்பிவந்ததாம்! அதனேடு கீழ்க்கண்ட குறிப்பும் இருந்ததாம்! காங்கிரஸ் அரசின் நிருவாக இலட்சணம்! படித்துவிட்டு ஒருமுறை சிரித்துவிடுங்கள், உலகச் செய்திகள் இப்படியுமா என்று! செய்தி இதுதான்: 'விண்ணப்பதாரர் உயிருடன்தான் இருக்கிருர்' என்பதை உறுதிப் படுத்தும் சான்றிதழ் ஒன்றை உடனே அனுப்பவும்,"

## முன்பே செய்திருக்க வேண்டாமோ!

உணவுப் பண்டங்களை, கடத்துவதில் ஈடுபடுகின்ற லாரிகளை பறிமுதல் செய்துவிடுவது பற்றி சட்டமியற்ற தமிழக அரசு இப்போது தீவிரமாக யோசித்து வருகிறதாக உணவமைச்சர் அறிவித்து இருக்கிருர். பதவி ஏற்றவுடனேயே எடுத்த நடவடிக்கைகளின் தொடர்பாக, இதனையும் செய்துவிட்டிருந்தால், கடத்தல்காரர்களுக்குச் சரியான பாடமாகி இருக்கும், சமூகக் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு எந்த வகையிலாவது அச்ச உணர்ச்சியை உண்டாக்கியே தீரவேண்டும்! உடைமைகள் பறிமுதல், நீண்ட காலத் தண்டனை போன்றவைகள் பற்றியும் அமைச்சர் சிந்திக்க வேண்டிக் கொள்வோம்!

## உரிமை வேண்டுமாமே, உரிமை!

'செத்தும் சத்தம் கேட்குதடி சிங்காரி! என்றெரு நாட்டுப் பாடல் உண்டு தமிழகத்தில். மாடு இறந்தால் அதன் தோல், பறையாகி ஒலிக்கிறது என்பதுதான் இதன் கருத்து. தமிழகத்தில் இந்த மாட்டுக் கட்சியினர் மாண்டுபோய் சரியாக ஓர் ஆண்டு ஆகிவிட்டது. காலஞ் சென்றவர்களுக்கு நினைவு நாள் கொண்டாடுவது வழக்கம்தான். அந்த வழக்கை யொட்டி, காங்கிரசும், இத்திங்கள் 25ம் நாள் 'உரிமை கோரும்' நாள் நாடெங்கும் கொண்டாடப் போகிருர்களாம்! என்ன உரிமையோ! என்ன கோரிக்கையோ! அவர்களின் அறிக்கையைப் பார்த்தால், குத்து! வெட்டு! கொலை செய்! கற்பழி! தீவை! என்று தான் போதனை செய்வதாகத் தோன்றுகிறது! இந்த உரிமைகளைக் கேட்கத்தான் 'நாள்' வைத்திருக்கிருர்களோ! என்னவோ! போலீசுக்குச் சரியான வேலை இருக்கக்கூடும்!

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு!

# சித்தர் நவலோக கல்பம்

தங்கம் வெள்ளி, தாம்பரம், மற்றும் பல உலோகங்கள், அனேக அபூர்வ மூலிகைகள், மருந்துப் பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சிக்குப்பின் உருவானது.



## டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளையின்

## ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை

—[REGD]—

**307 / 308, திருவல்லிக்கேணி ஹைரோடு,**
**திருவல்லிக்கேணி,** சென்னை-5

**தொலைபேசி எண்: 84786**

**கிளை வைத்தியசாலை:**
**மாமண்டூர் வடபாதி** பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா

**ஆஸ்துமா, மதுமேகம், (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம்,**
**யானைக்கால் மற்றும நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கும்,**
**டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே**
**பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும்**
**பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கிளை வைத்தியசாலையிலும்**

நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிறார்.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருகச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.